REGD M 4642.

சந்தா விபரம்
—
1 ஆண்டு ரூ 7,
½ ,, 3 8 0

# திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் | மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 14—8—49 | இதழ் 7

## ★ ஆஸ்திரேலியா ★

[நாகைவெளி குஞ்சிதம்]

1606-ம் ஆண்டிற்கு முன்பு ஆஸ்திரேலியாவைப் பற்றியோ அப்பெயருடன் ஒரு கண்டம் பசிபிக் மகா சமுத்திரத்தில் இருக்கிறதென்றோ ஐரோப்பியர்களுக்குத் தெரியாது. இந்தக் கண்டத்தைக் கண்டு பிடித்த பிறகு 1642-ம் ஆண்டில் டச்சு கிழக்கு இந்தியா கம்பெனி அபெல் டாஸ்மான் என்றவரை அந்த புதிய பெரிய நிலப்பரப்பை ஆராய்ந்து வரும்படி அனுப்பியது. அதன் பிறகு டச்சுக்காரர்கள் அக்கண்டத்தைப் பற்றி அதிக சிரத்தை கொள்ளவில்லை.

ஏறக்குறைய 100 வருடங்கள் சென்ற பிறகு கேப்டன் ஜேம்ஸ் கூக் என்பவரை இங்கிலீஷ்காரர்கள் அனுப்பியது, அவர் நியூசிலண்டையும் ஆஸ்திரேலியாவின் கிழக்கு பாகத்தையும் கண்டுபிடித்தார். 1770-ம் ஆண்டில் கேப்டன் கூக் பிரிட்டனுக்காக ஆஸ்திரேலியாவில் கொடியை நாட்டினர். அதன் பிறகு பிரிட்டிஷார் தண்டனை அடைந்த குற்றவாளிகளாகிய வெள்ளையரை ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பி வந்தனர். அது பெரிய ஜெயிலாகவே பல ஆண்டுகள் விளங்கி வந்தது. எப்படி அந்தமான் தீவுகளுக்கு இந்திய குற்றவாளிகளை பிரிட்டிஷார் இந்தியாவிலிருந்து அனுப்பினர்களோ அதேபோல் அதே பிரிட்டிஷார் பிரிட்டனின் குற்றவாளிகளை ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பிவந்தனர்.

இக்கண்டத்தின் பரப்பளவு 2974581 சதுர மைல்கள் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய எழுபது இலட்சம் (ஏழு மில்லியன்) மக்கள் தொகை கொண்டதுமாக தற்போது விளங்குகிறது. 1901-ஆண்டில் ஒரு பிரிட்டிஷ் காமன்வெல்த் நாடாக ஆஸ்திரேலியா மாறியது.

சரித்திர ஆராய்ச்சியாளர்கள் இக்கண்டத்தில் சரித்திர ஆதிகாலத்தில் நீக்ராயிட் என்ற கருப்புநிற ஜாதியர் வசித்து வந்ததாகவும் சென்றநான்கு நூற்றாண்டுகளுக்கிடையில் காகேசியன் என்ற வெள்ளைநிற ஜாதியர்கள் அதிகமாகஇந்த இடத்தில் குடியேறி இருப்பதாகவும் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆகவேகருநிற ஜாதியாரும் வெள்ளைநிறத்தவரும் கலந்துவசிக்கும் நாடுதான் ஆஸ்திரேலியா என்பது தெளிவாக,நமக்கு விளங்குகிறதல்லவா?

தற்பொழுதும் அந்த பழைய கருப்பு நிற ஜாதியார் ஆஸ்திரேலியாவின் வடபாகத்தில் வசித்து வருகிறார்கள். ஆஸ்திரேலியாவின் வடஎல்லை அராபூரா கடல். அக்கடலில் முதலைத் தீவுகள் என்ற தீவுகள் உள்ளன. அதற்கு கொஞ்சம் தெற்கில் ஆர்ன்ஹெம் நிலம் (Arnhem Land) என்ற நிலப்பரப்பில் மேலே கூறப்பட்டுள்ள ஆஸ்திரேலியாவின் ஆதிக்குடிகளாகிய கருப்பு மனிதர்கள் வசித்து வருகின்றனர். இன்னும் அவர்கள் நிர்வாணமாய்த்தான் திரிகின்றனர். ஆணும் பெண்ணும் திரேக அமைப்பில்தான் வித்தியாசப்படுகின்றனரேயன்றி வேறு உடையில் அல்ல. இவர்கள் வெள்ளையர்களையும் அவர்கள் ஆட்சியையும் விரும்பவில்லை. விரும்புவதும் இல்லை. வெள்ளையர்களுக்கெதிராகவும் அவர்கள் ஆட்சிக்கெதிராகவும் பல தடவைகளில் சண்டையிட்டிருப்பதாக சரித்திரக்காரர்கள் கூறுகின்றனர். ஆணும் பெண்ணும் சமத்துவமாக வாழ்கின்றனர். ஆஸ்திரேலியா கண்டுபிடிக்கப்பட்டநாள் தொட்டு 1933-ம் ஆண்டுவரை. யாரும் அந்த பழங்குடி மக்கள் வசிக்கும் இடத்திற்கு சென்றதில்லை. அவர்களை கவனித்தவர்கள் யாரும் இல்லை.

இக்கண்டத்திற்கு பிரிட்டனோ அமெரிக்காவோ அதிக சமீபத்தில் இல்லை. ஆனால் மலேயா இந்தோனேஷியத் தீவுகள், பிலிப்பைன், சைனா, இந்தியா, முதலிய நாடுகள் தான் சமீபத்திலிருக்கின்றன. அந்நாடுகளைப் பகைத்துக்கொண்டால் அனாதைதான் ஆஸ்திரேலியா! இக் காரணத்தையொட்டியே இந்தியா

எப்படியாவது சாமன் வெல்த்திலிருக்கவேண்டும் என அதிக சிரத்தை காட்டியது ஆஸ்திரேலியா. அவ்வளவு சங்கடமான நிலையிலிருந்தும் ஆஸ்திரேலியா "வெள்ளைமுறைக் கொள்கை" என்ற ஓர் திமிரான முறையைக் கைப்பிடித்து வெள்ளையனுக்குத்தான் குடியேறவும் அங்கேயே பரம்பரையாகத் தங்கவும் அனுமதியளிக்கவும் செய்யப்பட்டிருக்கிறது.

வெள்ளையரே உள்ளே வா மற்ற நிறக்காரரா வெளியேபோ என்கிறது ஆஸ்திரேலியா. ஏன்? அந்த பழங்குடி மக்களை கவனியாது தன் இனத்தவரை கவனித்துக்கொண்டிருக்கும் தற்குறித்தனம் வெளிப்பட்டு விடுமென்ருு? இவ்வளவு நாகரிகம் கல்வியெல்லாம் முற்போக்கடைந்திருக்கும் இக்காலத்தில கூட ஆஸ்திரேலியா உலகை ஏமாற்றப் பார்க்கிறதே, அதுதான் விந்தை!

(த. மு.)

## வானவூர்தி

4-ம் பக்கத் தொடர்ச்சி

காற்ருடியை எவ்வாறு காற்று மோதி மேலே தூக்கித்தாங்கிக்கொண்டிருக்கிறதோ அதேமாதிரிதான் காற்று ஏரோப்ளேனில் சிறகுகள் அல்லது இறக்கைகளில் மோதி அதை மேலே தாங்கிக் கொண்டிருக்கிறது. மோதிக்கிளப்ப கொஞ்சம் காற்றுப் போதும், ஆனுல் வானவூர்தியை மேலே கிளப்பித் தாங்க பலமான காற்று அடிக்க வேண்டும். அவ்வித பலமான புயற் காற்றை வானவூர்திக்கு முன்புறமுள்ள விசிறி உண்டாக்குகிறது விசிறி ஒரு நிமிடத்திற்கு சுமார் 2000 முறை சுழலும். விசிறி சுழலும்போது சுழல்காற்று உண்டாவது மாத்திரமின்றி அது காற்றைக் குடைகிறது. அதாவது ஒரு ஸ்க்ரூ (Serew) ஆணியை ஒரு கட்டையினுள் செலுத்தும்போது எவ்வாறு கட்டையைக் குடைந்து செல்லுகிறதோ அதேபோல் விமானத்தின் விசிறி காற்றைக்குடைகிறது. ஸ்குரு ஆணியைச் சுற்றும்போது ஆணியின் கொண்டை முன்பக்கமாகக் கட்டைக்குச் சமீபமாகப் போகிற மாதிரி விமானத்தின் விசிறி காற்றைக் குடையும் போது விசிறியும் முழு ஏரோப்ளேனும் முன் பக்கமாக இழுக்கப்படுகின்றன.

வானவூர்தி தரையில் அதன் சக்கரங்களின்மேல் நிற்பதாக வைத்துக் கொள்வோம். அப்போது இறக்கைகள் முன்பக்கம் தாழ்ந்தும் சரியாக இருக்கும். இப்போது எஞ்சினைத் துவக்கிவிட்டால் விசிறிவேகமாகச் சுழலத் தொடங்கும். விசிறி காற்றைக் குடைவதால் விமானம் முன்பக்கமிழுக்கப்பட்டு அதன் சக்கரத்தினுதவியால் தரையின் மேல் வெகு வேகமாக ஓடும். அப்போது விமானம் ஓடும் திசைக்கு எதிர்பக்கமாகக் காற்று ஓடி வானவூர்தியின் சிறகுகளினடிப்பக்கம் மோதும். போதுமான வேகம் வந்ததும் வெகுபலமாகக் காற்று சிறகுகளினடிப்பக்கம் மோதவும் வானவூர்தி தரையை விட்டெழும்பும். அப்போது வால் பக்கமிருக்கும் படுக்கை வசமான தகட்டை (Elevator) மேல்பக்கம் தூக்கினுல் விமானம் சுலபமாக மேலேறும். திசையைத் திருப்ப உதவுவது வால்பக்கமுள்ள சுக்கான். அதை வலதுபுறம் திருப்பினுல் விமானமும் வலது புறம் திரும்பும். அது படகுகளிலிருக்கும் சுக்கானைப் போன்றது. கீழே இறங்குவதற்கு வால்பக்கமுள்ள படுக்கை வசமான தகட்டைக் கீழ்பக்கம் சாய்க்கவேண்டும். வானவூர்தியில் விலாப்புறம் நீட்டிக்கொண்டிருக்கும் சிறகுகளினடிப் பக்கத்தில் காற்று மோதுவதால் விமானம் காற்றில் மிதக்கிறது. அதன் பக்கம் வைத்திருக்கும் விசிறி சுழலுவதால் விமானம் முன்பக்கம் ஓடுகிறது. சுருக்கமாக விமானத்தைத் தாங்குவது அதன் சிறகுகள். அவை ஓடச்செய்வது அதன் விசிறி என்று சொல்லலாம்.

ஆகாயக்கப்பல் (Airship) ஆகாய விமானம் (Aeroplane) இவ்விரண்டிற்கும் வித்தியாசமுண்டு. ஆகாயக் கப்பல் அல்லது ஜெப்லின் என்பது காற்றைவிட இலேசானது. அதில் நிறைய ஜலவாயு (Hydrogen) சேர்த்து வைத்திருக்கிருர்கள். அது தோற்றத்தில் பெரிய மீன்போல சிறகுகளில்லாமலிருக்கும். எஞ்ஜின் நின்று போனுலும் அது காற்றில் மிதந்துகொண்டிருக்கும். ஆனுல் ஏரோப்ளேனின் எஞ்சின் நின்றுவிட்டால் விமானம் தரைவந்து சேர்ந்துவிடும். ஆகாயக்கப்பல் காற்றைவிட இலேசாக மிதக்கக்
கூடியதாக இருப்பதால் அதை
ஓட்டுவதற்கு விசிறியும் திசை
திருப்ப சுக்கானும் மட்டும் உண்டு

—※—

## தியாகராயர் கல்லூரி

சர். பி. தியாகராயர் உயர்நிலைப்
பள்ளி, தியாகராயர் கல்லூரியாக
உயரப்போகிறது! கேட்கும்போதே
மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டு
ஓடுகிறது! அதை முப்பெருங் கலை
வாணர்கள் முன்னின்று நடத்தி
வைக்கப் போகிருர்கள்! செய்தி
நம்மை இன்பக் கடலில் கொண்டு
போய் ஆழ்த்துகிறது!

வீழ்ச்சியுற்ற மக்களின் எழுச்சிக்
காகப் பாடுபட்டு, வீடுவாசல்களை
மறந்து, தன்னலங்கருதாது உழைத்
துத், திராவிடமெங்கும் புகழொளி
பரப்பி மறைந்த வெள்ளுடை வேந்
தன் சர். பி. தியாகராயரின், அழி
யாச் சிறப்பு உயர்நிலைப்பள்ளி வடி
வில் வட சென்னையில் காட்சிய
ளித்து வருவதை யாவரும் அறிவர்
அப்பள்ளி நிதியைப் பெருக்கவும்
அதனைக்கல்லூரி அளவிற்கு உயர்த்
தவும் இசையரசு. எம். எம். தண்ட
பாணி அவர்கள் பெரிதும் முயற்சி
எடுத்து, இசைவிருந்துகள் நடத்தி
அதன்மூலம் கிடைத்த பொருளை
நிதியில் சேர்ப்பித்துள்ளார்கள். கல்
லூரியை அடுத்த ஆண்டிலேயே
துவக்கிவிட, தங்களாலான பொரு
ளுதவியைச் செய்வதென இசை
வேந்தன் எம். கே. தியாகராஜபாக
தரும், நகைச்சுவை நடிகர் என்
எஸ். கிருஷ்ணனும் வாக்களித்துள்
ளார்கள். கல்லூரியின் முதலாண்டு
நிர்வாகியாக பாகவதரும், இரண்
டாவது ஆண்டு நிர்வாகியாக நகைச்
சுவை நடிகரும் இருக்க ஒப்புக்
கொண்டது பெருமைக்குரியதாகும்
கொடை உள்ளம் படைத்த கலை
வாணர் மூவரையும் நாம் மனமார
பாராட்டுகிறோம்; வாழ்த்துகிறோம்
இசைவிருந்து தந்து முயற்சிக்கு
ஆதரவளித்த ஏனைய இசைவாணர்
களுக்கும் நம் பாராட்டுதல்!

# வானவூர்தி வரலாறு

பறவைகளைப்போல் ஆகாயத்தில் றக்கவேண்டுமென்ற ஆசை வெகு ாலமாக மனிதனுக்கும் இருந்திருக் றது. பறப்பதற்கு வேண்டிய ாதனங்களைக் கண்டுபிடிக்க மனி ன் வெகுகாலமாகத் தன்னாலான யற்சி எடுத்து வந்திருக்கிறான். றவைகளின் சிறகுகளைப்போல் பரிய சிறகுகளைச் செய்து கைகளில் கட்டிக்கொண்டு பறக்க யற்சித்தவர்கள் பலர். வேறு சிலர் இவ்விதச் சிறகுகளைக் கட்டிக் கொண்டு உயரமான கோபுரங்களி ருந்து குதித்துத் தொப்பென்று ழுந்து மாண்டார்கள். பதினெட் ாம் நூற்றாண்டுவரை மனிதன் றப்பதற்குப் பழக எடுத்துக் கொண்ட முயற்சியெல்லாம் விழ லுக்கு இறைத்த நீராய் முடிந்தன. 8-ம் நூற்றாண்டின் துவக் த்திலிருந்த விஞ்ஞான அறிவாளி ள் மனிதனால் பறக்கவே முடியா தென்றும் பறவைகளைவிடப் பெரிய ருவத்தையும் கனத்தையுமுடைய ந்த பொருளும் பறக்க முடியா தென்றும் முடிவுக்கு வந்தார்கள்.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் பிரான்ஸ் தேசத்தில் சித்த மாண்ட்கால்பியே Montgolfier) என்ற இரு சகோ ரர்கள் சூடான காற்றையும் புகைப் யையும் பைகளில் அடைத்துவிட் ால், அப்பைகள் ஆகாயத்தின் மேலேறிப் பறக்கின்றன வென்று ண்டுபிடித்தார்கள். இவைகளுக் ப் புகைக்கூண்டுகள் (Balloons) ன்று பெயர். அக்காலத்தில் புகைக் ண்டுகள் ஆகாயத்தில் பறப்பதைப் ார்த்து எல்லோரும் பிரமிப்படைந் ார்கள். முதலில் சூடான காற்றை ரப்பி புகைக் கூண்டுகளைப் பறக்க ிட்டார்கள். பின்பு காற்றைவிட லேசான அப்ஜனகம் என்ற ஜல் வாயு (Hydrogen) வைக் கூண்டுகளில் நிரப்பிப் பறக்கவிட்டார்கள். வெறுங் கூண்டுகளைப் பறக்கவிட்டுப் பார்த்தபின்பு கூண்டுகளுக்கடியில் கூடைகளைக் கட்டித் தொங்கவிட்டு அதில் உயிர்ப் பிரயாணிகளை வைத்துப் பறக்கவிட்டார்கள். பின்னர் 1783-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19-ந் தேதி பிரான்ஸ் தேசத்து மன்னர் முதற்கொண்டு பெருந்திரளான கூட்டத்தின் முன்னிலையில் புகைக் கூண்டில் ஒரு சேவல், ஒரு வாத்து, ஒரு ஆடு, இம்மூன்றையும் வைத்துப் பறக்கவிட்டார்கள். பார்த்தவரெல்லாம் ஆச்சரியப்படும்படி புகைக் கூண்டு 1500 அடி உயரம் போய்ப் பின்கீழிறங்கியது. முதன் முதலாகப் பிரயாணஞ் செய்த ஆடு, வாத்து, சேவலும் சுகமே திரும்பின.

சூடான காற்றால் நிரப்பப்பட்ட கூண்டுகள் காற்றில் பறக்குமென்ற உண்மையை மாண்ட்கால்பியே சகோதரர்கள் கண்டுபிடித்தார்கள். புகைக்கூண்டுகள் உயரப்போகக் காரணமென்னவென்று அவர்களால் ஊகிக்க முடியவில்லை. தண்ணீரில் கார்க் அல்லது நெட்டித் துண்டைப் போட்டால் அது எவ்வாறு தண்ணீரின் மேல் மட்டத்தில் வந்து மிதக்கிறதோ, அதே மாதிரிதான் புகைக் கூண்டுகள் காற்றில் மிதக்கின்றன. நெட்டித் தண்ணீரைவிட லேசானதால் தண்ணீர் நெட்டியை மேலே தள்ளுகிறது. அதைப் போலவே காற்றைவிட இலேசான வஸ்துவைக் காற்று மேலே தள்ளுகிறது. பூமியைச் சுற்றிலும் காற்றினலான சமுத்திரம் சூழ்ந்திருக்கிறது. காற்றைவிட இலேசான சூடான காற்று அல்லது ஜலவாயு (Hydrogen) வை ஒரு பையில் அடைத்து விட்டால் காற்று அதைத் தள்ளி மேலே போகச் செய்கிறது. தற்காலத்தில் சிறு பையன்கள் விளையாடுவதற்காகச் சிறு ரப்பர் பலூன்களில் ஜலவாயுவை அடைத்துப் பெரிய பட்டணங்களில் விற்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

ஆரம்பத்தில் புகைக்கூண்டில் மனிதரை ஏற்றிப் பறக்கவிட பிரான்ஸ் தேசத்து மன்னர் உத்தரவளிக்க மறுத்துவிட்டார். பிரஞ்சுவா பிலாத்தர் (Francois Pilatrédes Roziers) என்ற துணிகரமுள்ள வாலிபர் முதல் முதல் ஆகாயத்தில் பறக்கும் வாய்ப்பைத் தானடைய வேண்டுமென்று அரசரை வற்புறுத்தி உத்தரவு பெற்றார். அன்றியும் 1783-ம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ந் தேதி திரளான மக்கள் கண்ணிமை கொட்டாமல் ஆச்சரியத்தில் மூழ்கியிருக்க பிலாத்தர் புகைக் கூண்டிலேறி மேலே சென்று சிறிது நேரம் கழித்துச் சுகமே கீழே வந்து சேர்ந்தார். இவர்தான் ஆகாயத்தில் பிரயாணம் செய்த முதல் மனிதர். இதற்குப் பின் பல பேர் பல தேசங்களிலும் புகைக் கூண்டுகளிலேறிப் பறக்க ஆரம்பித்தார்கள். அந்தச் சமயத்தில இங்கிலாந்தில் வசித்து வந்த லூனர்டி (Lunardi) என்ற இத்தாலியர்தான் முதன் முதலாக இங்கிலாந்தில் புகைக் கூண்டிலேறிப் பறந்தவர். அவருக்குப்பின் 1785-ம் ஆண்டு ஜனவரி மாதம் 7-ம் தேதி பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்த (Blanchard) பிளான்சார்ட் என்பவர் இங்கிலாந்திலிருந்து புகைக் கூண்டிலேறி 21 மைலுக் கப்பாலுள்ள பிரான்ஸ் தேசத்தை யடைந்தார். இவர்தான் முதன் முதலாக ஆகாய மார்க்கமாக இங்கிலாந்திற்கும் பிரான்சுக்கும் மத்தியிலுள்ள குறுகலான கடலைக் கடந்தவர்.

புகைக்கூண்டு காற்றில் மேலே சென்று மிதந்து காற்றடிக்கும் பக்

கம் போகுமே யொழிய நம்மிஷ்டம் போல் புகைக்கூண்டை எத்திசையிலும் போகவைக்க முடியாது. இதுதான் புகைக் கூண்டின் பெருங்குறை. வடபக்கம் போகவேண்டியிருக்கும்போது காற்று தென்புறமாக அடித்தால் புகைக்கூண்டு தென்பக்கந்தான் போகும்.

புகைக்கூண்டுகள் காற்றை விட இலேசானவை. இப்போது சாதாரணமாக 'விர்' என்ற சப்தத்துடன் பெரிய பட்டணங்களின்மேல் பறந்து செல்லும் ஏரோப்ளேன் எனப்படும் வானவூர்திகள் காற்றைவிடக் கனமானவை. இருபதாம் நூற்றாண்டில் தான் காற்றைவிடக் கனமான வானவூர்திகள் ஆகாயத்தில் பறக்கத் தொடங்கின. நாளடைவில் 1903-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ம் தேதி அமெரிக்கா தேசத்தைச் சேர்ந்த வில்பர் ரைட், ஆர்வில் ரைட் (Wilbur Wright and Orville Wright) என்ற இரு சகோதரர்கள் முதன் முதலாகக் காற்றைவிடக் கனமான ஆகாயவிமானம் செய்து பறக்கவிட்டார்கள். புகைக்கூண்டுகள் காற்றில் பறப்பது விசித்திரமான காரியமல்ல. ஆனால் காற்றைவிடக் கனமான வானவூர்தி ஆகாயத்தில் பறப்பது மிகவும் ஆச்சரியமான சம்பவம். ரைட் சகோதரர்கள் சைக்கிள் செம்மை பண்ணும் கடையை வைத்திருந்தார்கள். சிறு வயதிலிருந்தே இயந்திர வேலைகளைச் செய்வதில் உற்சாகமும் திறமையுமுடையவர்கள். அவ்விருவரும் மரத்தடியில் மறைந்திருந்து பறவைகள் பறக்கும் விதத்தைக் கூர்மையாகப் பலமுறை கவனித்திருக்கிறார்கள். இவர்கள் கைப்படச் செய்த வானவூர்தியில் மேற்சொன்ன தேதியில் பறந்தபோது விமானம் காற்றில் 59 வினாடி, (Seconds)களில் எண்ணூற்று ஐம்பத்திரண்டு அடி தூரந்தான் பறந்தது. பறந்த நேரமும் தூரமும் மிகக் குறைவாகவிருந்த போதிலும் இதுதான் முதல்வெற்றி. ரைட் சகோதரர்களுக்கிருந்த ஆனந்தத்திற் களவில்லை. உலகத்தாரெல்லாம் ரைட் சகோதரர்களின் திறமையை மெச்சினார்கள்.

1908-ம் ஆண்டில் வில்பர் ரைட் பிரான்ஸ் தேசத்திற்குப் போய் அங்குள்ளவர்களுக்குப் பறக்கும் விதத்தைக் காட்டினார். தற்போது எல்லா நாடுகளிலும் வானவூர்தி (ஆகாய விமான) ஆராய்ச்சி நிலையங்கள் அமைக்கப்பட்டு விமானங்கள் அதிகமதிகமாக அபிவிருத்தியாகி வருகின்றன. லண்டன் நகரிலுள்ள 'டெய்லி மெயில்' (Daily Mail) பத்திரிகைக்காரர் வானவூர்தியின் மூலமாகப் பிரான்ஸ் தேசத்திலிருந்து இங்கிலாந்தை வந்தடைபவருக்கும் லண்டனிலிருந்துமாஞ்செஸ்டர் நகர் போயடைபவருக்கும் அமெரிக்காவிலிருந்து அட்லாண்டிக் சமுத்திரத்தைக் கடந்து 1800 மைலுக் கப்பாலுள்ள இங்கிலாந்தையடைபவருக்கும் ஆயிரக் கணக்கான பவுன் பரிசளித்ததால், பல தைரியசாலிகள் ஆகாயவிமானங்களில் பறக்க முன்வந்து ஆச்சரியத்துக்குரிய தீரச் செயல்களைச் செய்திருக்கிறார்கள். ரைட் சகோதரர்கள் வானவூர்தி கண்டுபிடித்து 37 ஆண்டுகள்தானான போதிலும் இச்சொற்ப காலத்திற்குள் பறத்தல் எவ்வளவு அபார அபிவிருத்தியடைந்திருக்கிற தென்பது எல்லோருமறிந்த விஷயம். வடதுருவம் தென் துருவத்தின் மேலெல்லாம் மனிதர் விமானங்களி னுதவியால் பறந்துவிட்டார்கள், பெண்கள்கூட, தனிமையாக வானவூர்தியிலேறிப் பூமியைச்சுற்றிப்பறந்துவிட்டார்கள். லண்டன் நகரிலிருந்து சுமார் 12000 மைலுக் கப்பாலுள்ள ஆஸ்திரேலியா கண்டத்திலிருக்கும் மெல்போர்ன் பட்டணம்வரை வானவூர்திப் பந்தய ஓட்டம் சில ஆண்டுகளுக்கு முன் நடந்தது எல்லோருக்கும் நினைவிருக்கலாம்.

ஆகாய விமானத்தின் அமைப்பைப் பற்றியும் அது எவ்வாறு காற்றில் மிதக்கிறதென்றும் சற்றுக் கவனிப்போம். வானவூர்தியின் விலாப் பக்கத்தில் இருபுறமும் பறவைகளின் இறக்கைகளைப்போல்படுக்கை வசமான தகடுகள் நீட்டிக்கொண்டிருப்பதை எல்லோரும் பார்த்திருக்கிறோம். அவைகளுக்குச் சிறகுகள் அல்லது இறக்கைகள் (Wings) எனப் பெயர். பக்கத்திற்கு ஒரு சிறகுள்ள விமானத்தின் பெயர் மோனோப்ளேன் (Monoplane) பக்கத்திற்கு இரண்டு சிறகுள்ளது பைப்பிளேன் (Biplane) எனப்படும். அதேமாதிரி மூன்றுள்ளவை ட்ரைபிளேன் (Triplane) ஏரோபிளேனில் முன்பக்கம் காந்த விசிறிபோல் சுழலக்கூடிய விசிறி ஒன்றுண்டு.
இவ்விசிறியை வேகமாகச் சுற்ற
அதிக விசையுள்ள மோட்டார் இய
திரம் ஒன்று வைக்கப்பட்டிரு
கிறது. இந்த இயந்திரம் பெட்ரோ
எண்ணெய் சக்தியால்தான் வே
செய்கிறது. ஏரோப்பிளேனின் வா
பக்கம் மீன் வால் போலவிருக்கும்
அதில் செங்குத்தான தகடு ஒன்று
படுக்கை வசமான தகடு ஒன்
முண்டு. செங்குத்தான தகடுதா
திசை திருப்பும் சுக்கான் (Rudde
படுக்கை வசமான தகடு (Elevato
விமானத்தை மேலேற்ற அல்ல
கீழே இறக்க உதவும். விமானத்தி
கீழ்ப்பக்கம் தரையில் ஓடுவத
காக இரண்டு மோட்டார் சக்ர
களிருக்கின்றன. தண்ணீரிலிறங்க
கூடிய சீபிளேன் (Seaplane) அ
பாகத்தில் சக்கரமில்லாமல் பட
போலிருக்கும்.

சிறு பையன்கள் சதுரக்கா
தத்தை நூலில் கட்டி காற்றாடி அ
லது பட்டம் என்று காற்று கால
தில் பறக்கவிடுவதைப் பார்த்திருக்
றோமல்லவா? பட்டம் அல்லது கா
றாடி எவ்வாறு காற்றினால் தாங்
படுகிறதோ அதே மாதிரிதா
ஏரோப்பிளேனும் தாங்கப்படுகிற
பட்டத்தின் நூலை ஒரு பைய
பிடித்துக்கொள்வான். வேகமாக
காற்றடிக்குமானால் பட்டத்தின்மே
காற்றுமோதி அதை மேலே தூக்கு
காற்றடிக்காவிட்டால் அது கீ
விழுந்துவிடும். அப்படிக் காற்றடி
காமலிருக்கும் சமயத்தில் நூலை
பிடித்திருக்கும் பையன் வேகம
ஓடுவான். அவன் ஓடும்போது ஓ
திசைக்கு எதிர்ப்பக்கம் காற்று ஓ
பட்டத்தை மோதித் தூக்குகிற
காற்று அசைந்து வேகமாக அடி
தால் பையன் அசையாமல் நிற்பா
பட்டம் மேலேபோகும். அப்படி
காற்றடிக்காவிட்டால் பைய
அசைந்து ஓடுகிறான். அப்போத
காற்று மோதிப்பட்டத்தைத் தூ
கிறது. காற்று அசைந்துபட்டத்
மோதுவதும்ஒன்றுதான். அசை
ஓடிவரும் கல் நம் தலையில் மோத
போதும் அசையாமலிருக்கும்
லின் மேல் நம் தலை அசைந்துபே
மோதும்போதும் ஏற்படும் ப
ஒன்றுதானே. பட்டம் கொ
தூரம் மேலே காற்றோட்டமிருக்
படியால் மிதந்து பறந்துகொ
ருக்கும்.

(2-ம் பக்கம் பார்க்க)

## இரு துருவங்கள்

16-ம் பக்கத் தொடர்ச்சி

ாட்சலோக வழியைக்காணும் லட்சேபத்தை ரசித்தல்—இங்கு மவர்களின் நிகழ்ச்சி நிரல் நாள் ாறும்! விஞ்ஞானத்தின் வளர்ச்சி லே "சக்கரம்" இருக்கிறதே, ந்தக் கருவியைக் கண்டு பிடித்தவ ன் பெயர் தெரியாவிட்டாலும் அந்த அடிப்படையான "வட் ்" என்கிற தத்துவத்தைக் ாண்டுதான் உலகமே இயங்குகி ு என்று கூறலாம். ஆனல் நம்ம கள் அதே ஆழியைப்பற்றிக் ும் போது ஆழிகொண்டபெரு ரின் கதையைத்தானே கூறு ர்கள்? "ஓர் உறுதியான நெம்பு ாலும், அது நின்று ஆட ஒரு தாரமும் கிடைத்துவிட் ல் நான் இந்த உலகத்தை ்டிவிடுவேன்" என்று ஓர் விஞ் னி கூறினதாகப் படிக்கிறோம். ந்த விஞ்ஞானி கூறியபடி நடக்க ியாவிட்டாலும் அந்த அடிப் டயான தத்துவம் பொய்யல்ல!

ஆனல் "நம்மவர்கள்" கூறும் ாது "இரணியாட்சன் எனும் அசு உலகத்தையே பாயாகச்சுருட்டிக் லிலே ஒளித்தான்" என்று ந்ததாகக் கூறுமளவிற்கு அந்த ஞானியின் "கனவு' நடக்கக் ாததும் அல்ல! மேலும் அவன் றந்த காலத்திலும் கூறவும் லே!!

விஞ்ஞான வளர்ச்சியிலே மேலே ட்டினரைப் பிடிக்க முடியாத அள கு அவர்கள் நம்மைவிட முன் றி விட்டார்கள். இந்த நிலையிலே து ஏட்டுச்சுவடிகளைக் களவாடித் ன் வளர்ச்சியடைந்தான் அந்த ந்சகன் என்று ஏன் நமது நெஞ்சு க்குருகவேண்டும்? அவன் ஏடு ில்உள்ள எழுத்துக்களை அறிந்து க்கக்கூடிய "யந்திர மனிதனை" டத்து விட்டான். நாம் ஆண்டு ாறும் நம் ஏடுகளுக்கு "தூப தீப வேத்தியம் சமர்ப்பயாமி" செய் றோம்! அவன் கொசுவின் இசையி லேயே அதன் இனத்தை இழுத்து ிக்கும் ஆற்றலைப் பெற்றுவிட் ன். நம்மவர் இன்றும் 'சமுதாயக் காசு" அவதாரக் கதைகளைப் ்க்கொண்டிருக்கிறார்கள்.

உண்மையாகவே விஞ்ஞானம், என்பது ஓர் விசித்திர வனிதை. அயல் நாடுகளிலே, அந்த விசித்திர வனிதை மக்களை அணைத்து இன்பம் பயக்கிறாள். அவளைத் தீய செயல்களுக்கு ஈடுபடுத்தும்போது அவள் துன்பம் இழைக்கிறாள். ஆனல் விஞ்ஞானம் விரித்த "மாயவலை"யில் விழாமல் அதை அடக்கி ஆள்பவன் அறிவுலகத்தை—ஏன்—ஓர் இன்ப புரியை நோக்கிச் செல்கிறான் என்பது தானே பொருள். தற்பொழுதுள்ள நிலையிலே விஞ்ஞானம் "விபரீத புரியை" நோக்கிச் செலுத்தப்படுகிறதே என்பதற்காக அதன் அரிய ஆற்றலை இழக்க முடியுமா? மலரிலே முள் இருக்கிறது என்பதற்காக அந்த மலரின் மணத்தை நுகராமல் தான் இருக்க முடியுமா?

அதோ மின் விசிறியினடியே நின்றுகொண்டு புதுமையைக் கண்டிக்கும் பழைமை விரும்பி வேறு யாருமல்ல! விஞ்ஞான ஆசிரியர் தான்! விஞ்ஞான பேராசிரியர் கல்லூரியிலே!! விஞ்ஞானத்தால் வயிறு வளர்ப்பவர் அதற்கு எதிரான வியாசர் காலத்தைப் பற்றி விளக்குகிறார் விஞ்ஞான வகுப்பிலேயே! இறந்த மொழிக்கு ஏற்றங் கொடுத்து பொய்ப் புராணங்களுக்குச் சப்பைக் கட்டு கட்டுகிறார். புதுமையின் பலன்களை நுகர்ந்துகொண்டு புதுமையைப் பழிக்கும் விசித்திரக்காரர்கள் இந்த நாட்டிலே தான் ஏராளமாக இருக்கிறார்கள்! விஞ்ஞானம்—வைதிகம் இவை இரண்டும் இரு துருவங்கள்! இரு துருவங்களிலும் இரண்டு கால்களையும் நிறுத்தி வாழ்வை நடத்த விரும்புகின்றனர் இந்த விசித்திரமானவர்கள்.

ஆம்! ரயில், கப்பல், விமானம், ரேடியோ, டெலிவிஷன், மின் விசிறி—இவைகளெல்லாம் விளையாடும் பொம்மைகளாகத்தான் தெரியும் இங்குள்ள வைதிக பரம்பரையினருக்கு இவைகளெல்லாம் வேடிக்கையாகத்தான் தெரியும் விஞ்ஞானத்தைப் பற்றி தெரிவிக்கப்படாத பாமரருக்கு. இவைகளெல்லாம் விளையாட்டு பொம்மைகளுமல்ல! வேடிக்கையுமல்ல!! உழைப்பின் விளைவுகள்!!! பல இரவுகள் கண்விழித்து, தன் உயிரையும் பணயம் வைத்து ஆக்கப்பட்ட பொருள்கள். நம் நாட்டிலேயுள்ள பழைமை விரும்பிகள் அந்த உழைப்பில் விளைந்த பொருள்களை மறைமுகமாக, இலைமறைகாயாக அனுபவிக்கின்றனரேயன்றி வெளிப்படையாக ஒப்புக்கொள்ள வெட்கப்படுகிறார்கள். ஆம்! உண்மையாகவே விஞ்ஞானம் என்னும் அந்த விசித்திர வனிதை நம் நாட்டில் ஓர் அழகிய விதவையாகக் காட்சியளிக்கிறாள்!

எனவே அந்த "அழகிய விதவை"யை மணந்து புது உலகை உருவாக்கப் புறப்படுவோம், வாருங்கள்! அந்த பேதமற்ற, புகழ்வாய்ந்த, பெரும்பயன் விளைவிக்கும் இன்ப மூட்டும் புது உலகிலே இனி நம் வாழ்வைத் துவக்குவோமாக!

7-ம் பக்கத்தொடர்ச்சி

இங்கு இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த ஒரு நாடகம் எவ்வளவு நற்பயனை, அடிமைப்பட்டுக் கிடக்கும் நீக்ரோக்களுக்குத் தரக்கூடியது, என்பதையும், இப்படிப்பட்ட காரியத்துக்கன்றி, வேறு எதற்காகத் தான், அறிவும் ஆற்றலும் பயன்படுத்தப்படவேண்டும், என்பதையும்பற்றிச் சிந்திக்கக் கேட்டுக் கொள்கிறோம். பகல்பட்டினி இராப் பட்டினியை நாடகமேடையில் சித்தரித்துக் காட்டாமல், பரதன் பாதுகையைத் தூக்குவதையும், அது போது ராமர், ஆனந்தக்கண்ணீர் விடுவதையுமே காட்டிக் கொண்டிருப்பதைத்தானு கலை, கலை, என்று கருதவேண்டும்! அறிவுவளர, அநீதி ஒழிய, அக்ரமம் தொலைய, ஆதிக்கக் காரரின் அட்டகாசம் அழிந்துபட, இனவிடுதலைபெற, உரிமைக்கிளர்ச்சி வெற்றிபெற, இப்படிப்பட்ட காரியங்களுக்கல்லவா, கலை பயன்படுத்தப் படவேண்டும், என்று கேட்கிறோம்.

"அவர்களைச் சாகவிடோம்" என்ற அற்புதமான, பயன்தரும் நாடகமாடி, தக்கதோர் பணிபுரிகின்றனர் அங்கு கலை, அரங்கு, மக்களின் அறிவுக்கண்களைத் திறக்கவைக்க உதவுகிறது. இங்கு 'கலைகலைக்காகவே' என்று கூவிக்கொண்டிப்போர் தீட்டும் நாடகங்கள், என்ன பலனைத்தருகின்றன? மக்களை வாழவிடோம்! என்றல்லவா இவர்கள் இங்கு நாடகமாடுகிறார்கள்! கலையைப் பயன்படுத்தவேண்டிய விதத்தை, அந்த நீக்ரோக்கள் நடத்தும் நாடக மூலமாகவாவது, கலைகலைக்கே என்று கூறிக்கொண்டிருப்போர், கற்றுத் தெளிவார்களா!

# அவர்களைச் சாகவிடோம்!

"நால்வருக்கு விடுதலை!" என்று தீர்ப்பளித்தார் நீதிபதி. களிப்புப் பூத்தது — ஒரு கணம்—ஆனால் கவலை, களிப்பை விரட்டிவிட்டது—மேலால் என்ன சொல்ல இருக்கிறாரோ என்று குழுமி இருந்தோர், ஆவலுடன் காத்துக்கொண்டிருந்தனர்.

மற்ற நால்வருக்குச் சிறை தண்டனை! என்று தீர்ப்பளித்தார். கோபமும் துக்கமும் பிடித்துக் குலுக்கியது, வழக்கு மன்றத்திலிருந்தோரை.

சிறையா! நம்மவர் நால்வருக்குச் சிறைத் தண்டனையா! நசுக்கப்பட்டு வரும் நம் இனத்தவரில் நாலு பேருக்கு, சட்டம், சிறைத் தண்டனையா விதிக்கிறது. என்ன உலகமடா இது.—என்று எண்ணினர்—கண் கலங்கினர்.

எனினும், துக்கத்தையும் கோபத்தையும் அடக்கிக்கொண்டு, மற்றும் "ஒரு குற்றவாளி"யை நீதிபதி என்ன செய்கிறார் பார்ப்போம், என்று, துடி துடித்த நிலையில் நின்றனர், துயருருவான அம் மக்கள்.

மற்றோர் குற்றவாளிக்கு மரண தண்டனை! என்றார் நீதிபதி, மரண தண்டனை! அவர்கள் இதயத்தின் மீது சம்மட்டி வீழ்ந்தது. அவர்கள் நின்று கொண்டிருந்த இடமே, கிடு கிடுகிடுவெனச் சுழல்வது போலிருந்தது. மரண தண்டனை! அவன் சாக வேண்டுமாம்! சட்டம் சீறுகிறதே பாம்பு போல! அவன் இறந்துபட வேண்டுமாம்! இறுமாப்பாளர்களின் இம்சையை அனுபவித்து வரும் இனத்திலுதித்த அந்த இளைஞன், தூக்குமேடை ஏறவேண்டுமாமே! என்ன கொடுமை! எப்படிச் சகிப்பது இதனை! ஏனோ எமக்கு இந்த நிலை! நாகரிக உலகமே! நாங்கள் நீதியற்றவர்களாகவேதான் இருந்து மடிய வேண்டுமா! மரண தண்டனையா அந்த வாலிபனுக்கு!—என்று மன்றம் நின்றோர் எண்ணிக் கதறினர்.

தீர்ப்பு அவர்களைத் திகைத்திடச் செய்தது; இதயத்தைப் பிளந்தது; என் செய்வர், பாபம், அவர்களோ, கருப்பர், அதிலும் நீக்ரோக்கள்! தீர்ப்பளித்தவரோ, அமெரிக்கர், ஆதிக்க இனத்தவர், வெள்ளை நிறத்தவர்!

ஒன்பது வாலிபர்கள் குற்றக் கூண்டிலே நிறுத்தப்பட்டனர். வழக்கின், பெயர் ஸ்காட்ஸ்பரோ வழக்கு என்பதாகும். அவர்கள் மீது சாட்டப்பட்ட குற்றம், அவர்கள், இருமாதர்களைத் தாக்கினர் என்பதாகும்.

இந்த வழக்கிலே நால்வர், குற்றம் செய்ததற்கு ருஜு கிடைக்காததால் விடுதலை பெற்றனர் — நால்வர் குற்றத்தில் கலந்திருந்தனர் என்பதற்காகச் சிறை தண்டனை பெற்றனர், ஒரு வாலிபன், முக்கியமான குற்றவாளி என்பதற்காக, மரண தண்டனை விதிக்கப்பட்டான்.

தாக்குவது தவறு; தண்டனை தரத்தான் வேண்டும்—அதிலும் மாதரைத் தாக்குவது மடைமையும் கொடுமையும் கலந்ததோர் குற்றம்; நிச்சயம் தண்டனை தரத்தான் வேண்டும்—ஆனால் என்ன தண்டனை? —மரண தண்டனை! ஏன் மரண தண்டனை, இந்தக் குற்றத்துக்கு? காரணம், குற்றம் செய்தவர்கள், நீக்ரோக்கள்!!

தாக்கினானே தருக்கன் — அடித்தானே ஆணவக்காரன் — பெண்களைத் தாக்கினானே பேயன்—என்று அல்ல, வழக்கு விசாரித்தோர், எண்ணியது; நீக்ரோக்கள், வெள்ளை மாதரைத் தாக்கினரே! அடிமைகள் ஆதிக்க இனத்தவரைத் தாக்கினரே! உரிமையற்று உழைத்துப் பிழைத்து வரும் கருப்பு மனிதர்கள், ஊராளும் உயர் ஜாதியினராகிய வெள்ளையரைத் தாக்கினரே! கைகட்டி வாய் பொத்திச் சேவகம் செய்து, காட்டும் இடத்தில் காலந்தள்ளிவரவேண்டிய கருப்புக் கூட்டத்துக்கா இந்த ஆணவம்! ஆதிக்கக்காரரை, எதிர்க்கும் துணிவு துளிர்க்கவிடலாமா! அந்தத் துளிரை உடனே கிள்ளி எறிந்துவிட வேண்டாமா? இல்லையானால், விஷ விருட்சமாகுமே! விதைகள் உதிருமே! மேலும் பல விஷச் செடிகள் முளைக்குமே! ஆதிக்கம் அழிந்துபடுமே! — என்று இவ்விதமாகத்தான் ஆதிக்கக்காரர்களான, அமெரிக்கர்கள் எண்ணினர், ஸ்காட்ஸ்பரோ வழக்கின் போது.

யாரோ, யாரையோ தாக்கிய, சிறு குற்றமாக அதனைக் கருதவில்லை! கருப்பர், வெள்ளையரைத் தாக்கிய, விபரீதச் செயலாகக் கருதிச் சீறினர்.

அதற்கு ஏற்றவண்ணமே சட்டமும் வேலை செய்தது. ஒன்பது நீக்ரோக்களில், ஒருவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

"பார்! அவன் தூக்கு மரத்தில் தொங்கப் போகிறான்! கருப்பன், பிணமாகத் தொங்கப் போகிறான்! அவன், எமது ஆதிக்கத்தை எதிர்க்கத் துணிந்தான், அறிவற்று. இதோ தூக்குத் தண்டனை அவனுக்குத் தரப்படுகிறது! நீக்ரோக்களே! ஜாக்ரதை! எமது 'சக்தி'யை அறியாது, வீணாட்டத்தில் இறங்கிப் பாழாகாதீர்! அதோ ஒரு நீக்ரோ, தூக்குமரத்தில்தொங்கப்போகிறான்! வெள்ளையரை எதிர்த்தால், தாக்கினால், ஆதிக்கத்தை எதிர்த்தால் என்ன நேரிடும் என்பதை இதிலிருந்தாவது தெரிந்து கொள்ளுங்கள்! நத்திப் பிழைக்க வேண்டியவர்களே! நாடாளும் இனத்தவர் நாங்கள்! உங்களை மாளச் செய்ய முடியும்! துரைமார்களாகிய எமது கோபத்தைக் கிளறினால், தூக்கு மரத்தில் தொங்கச் செய்வோம், உங்களை"—என்று ஆதிக்க ஆணவமும், நிறவெறியும் கொண்ட வெள்ளையர், உறுமினர். நீக்ரோக்களோ, உரிமையற்று உலுத்தர் வாழ்வு வாழ்வதால், நாம், மிருகமென நடத்தப்படுகிறோம்; மேனாமினுக்கியாக வாழும் இந்த வெள்ளையரால் நமது கதி கடைசிவரை இதுவேதானா! வெள்ளை

...ரின் ஆதிக்க வெறிக்குப் பலியாகித் தான் தீரவேண்டுமோ? இதற்கோர் பிமோசனம், விடுதலை, கிடையாதா; ம்மவர்களை நையப் புடைத்தாலும், கள்வி கேட்பார் இல்லையே! நம்து பீடுகளை வெறியர் கொளுத்தினால், வடிக்கையல்லவா பார்க்கிறார்கள்! ழைக்கிறோம், உழைப்பை மதிப் பாரில்லை! சாதாரண மனித உரிமை ளையும். நமக்களிப்பது கூடாது ன்று கொக்கரிக்கிறார்களே கொடிய ர்கள்!

திறமை இருக்கிறது — எனினும் கழப்படுகிறோம்! பலம் இருக் றது, உடலிலும் உள்ளத்திலும், னினும் பரிகசிக்கப்படுகிறோம்! டித்துப் பண்பு பெற்றாலும், திப்பளிக்க முன்வருவதில்லை. செல் ம் தேடிப்பெற்றாலும், கருப்பனி ம் காசு சேர்ந்துவிட்டதாலேயே ருப்பன், வெள்ளையன் ஆகிவிட முடியுமா, என்று கேலி பேசுகின்ற ர், வெறியர்கள்.

சீலர்கள் சிலர், இந்த நிறவெறி டாது என்று கூறினால், அவர்கள் தும் சிறிப்பாய்கின்றனர், செருக் டன். இந்த நிலையில் நாங்கள், ளத்தான் வேண்டுமா? வாழ வண்டுமானால், அடிமையாக இரு! ல்லையேல் சாகத் தயாராய் இரு!! ன்று கூறுகிறார்களே! — என்று றிக் கதறலாயினர் நீக்ரோ மக்கள்.

ஸ்காட்ஸ்பரோ வழக்கின் முடிவு, வர்களுக்குப் பேரிடி போலிருந் து. நீக்ரோ இனத்தின் நிலைமை வ்வளவு மோசமானதாக, ஆபத் ச் சூழ்ந்ததாக இருக்கிறது என் தை அறிந்துகொள்ள ஸ்காட்ஸ் ரோ வழக்கு உதவிற்று. நீக்ரோக் ள் பதைபதைத்துப் போயினர். வள்ளைநிற மாதைக் கறுப்பு நிறத்த ன் அடித்தால் மரண தண்டனை! றவெறிச் சட்டமல்லவா இது!

இந்த நிலைமையை விளக்கவும், ல்லறிவாளர்களின் ஆதரவைத் ரட்டவும், அந்தக் கடுமையான ர்ப்பை மாற்றவும், முனைந்து பணி ரிந்ததன் பயனாக, தூக்குத் தண் னை, பிறகு, ஆயுட்காலச் சிறைத் ண்டனையாக மாற்றப்பட்டது.

அவன் சாகவில்லை! வாழ்கிறான்! றையில்தான்!! எனினும் அவன் யிரோடு இருக்கிறான். அவனைச் ாகவிடாமல் செய்துவிட்டோம்! அவனுக்கு நேரிட இருந்த மரணத்தைத் தடுத்துவிட்டோம் என்ற ஓர் வித மகிழ்ச்சி, வெற்றிக்களிப்பு உதித்தது அந்த நீக்ரோக்களுக்கு. அந்த வெற்றிக்களிப்பிலே இருந்து, வேதனை வயலிலே முளைத்த வெற்றிக்களிப்பிலே இருந்து எழுந்தது, ஓர் நாடகம் — அவர்களைச் சாகவிடோம்—என்ற நாடகம்! அமெரிக்க நாட்டவருக்கும், அகில உலகுக்கும், இன்றைய அமெரிக்காவிலே, நீக்ரோக்களின் நிலை என்ன, அவர்கள் வெள்ளையர்களால் எவ்விதமாகவெல்லாம், அவமதிக்கப்படுகிறார்கள், அழிக்கப்படுகிறார்கள், அந்தக்கொடுமைகளையும் தாங்கிக்கொண்டு நீக்ரோக்கள் உரிமைக்கிளர்ச்சியை எவ்விதம்நடத்திக்கொண்டு வருகிறார்கள், என்பதை எடுத்துக்காட்டும், நல்லறிவுப் பிரசார நாடகம் தீட்டப்பட்டது.

“அவர்களைச் சாகவிடோம்” எனும் நாடகம், இப்போது அமெரிக்காவில் நியூயார்க் நகரக்கொட்டகை யொன்றில், நடத்தப்படுகிறது, நடிகர்களெல்லாம் நீக்ரோக்களே!

இந்த நாடகம், வெள்ளையர்களிலே வெறி அதிகம் ஏறாதவர்களின் மனதை உருக்கக்கூடியதல்லவா! மனிதாபிமானம், ஜீவகாருண்யம், நாகரிகம், எனும் பண்புகளைப்பற்றி அறிந்திருப்போரின் கண்களிலே, நீர் சொரியச் செய்யக்கூடிய நாடகமல்லவா, அது! வெள்ளை வெறியர்களுக்கு, தங்கள் கொடிய, கேவலமான மனப்பான்மை, இந்நாடக மூலம் வெட்டவெளிச்சமாக்கப்படுகிறதே என்ற, வெட்கமும், கோபமும் பொங்கிடலாயிற்று.

அந்த நாடகத்தைப் பார்த்தால், கல் மனமும் கரையும்.

அந்த நாடகத்தைப் பார்த்தால் தான், வெள்ளை நிறத்திலே உலவும் சில பல வெறியர்களின் போக்கு எவ்வளவு கேவலமானது என்பது விளங்குகிறது.

அந்த நாடகம், நாம் நாகரீகத்தின் நற்பண்பை பேச்சளவில் கொண்டவர்களே. யொழிய செயலிலே நாம் காட்டுமிராண்டிகளாகவே இருக்கிறோம், என்பதைக் காட்டுகிறது, என்றெல்லாம், பார்ப்போரைக் கருதச் செய்யும் விதமாக அமைந்திருந்தது அந்த நீக்ரோ நாடகம்.

வெள்ளை வெறியர்களால் இதைச் சகித்துக்கொள்ள முடியவில்லை. எப்படியாவது இந்த நாடகத்தைத் தடுத்துவிட வேண்டும், என்று தீர்மானித்தனர். வெறியரின் வழி என்னவாக இருக்கமுடியும்! கொடுமைதானே அவர்களின் ஆயுதம்!! அதையே, கையாளலாயினர்.

நீக்ரோ நடிகர்கள் அந்த நாடகத்தில் நடித்துவிட்டு, வீடு திரும்பும் போது, அவர்களைத் தாக்கலாயினர்! “நாடகமா ஆடுகிறாய்நாடகம்! நீக்ரோ நாயே! வெள்ளையரைக் கண்டித்து நாடகம் ஆடுகிறாயா! எவ்வளவு துணிவு உனக்கு! அதிலும், எங்கள் நாகரீக நகராகிய நியூயார்க்கிலா, நாடகம் நடத்துகிறீர்கள்” என்று கூவி, நடிகர்களைத் தாக்கலாயினர். அந்தக் கொடுமைக்காளான, நடிகர்கள், இப்போது, நியூயார்க் மேயருக்கும், போலீசுக்கும் மனுச் செய்து கொண்டுள்ளனராம்.

“அவர்களைச் சாகவிடோம்” என்ற நாடகம், நடத்துவதன் மூலம், அந்த நடிகர்கள், தங்கள் இனவிடுதலைக்கு, தன்மானத்துக்கு, உரிமைக்கு, உயர்ந்ததோர் பணி புரிகிறார்கள். அவர்களின், முயற்சியை உலகெங்குமுள்ள, உரிமை உணர்ச்சியை மதிக்கும் உயர்பண்பினர், பாராட்டத்தான் செய்வர். உலகுக்கே நாகரீகத்தையும் சமாதானத்தையும் சுபீட்சத்தையும் வழங்கவல்லோம் என்று வாய்ப்பறை அறையும் அமெரிக்கர்கள், நீக்ரோக்கள் விஷயமாகக் கொண்டுள்ள மனப்போக்கும், எடுத்துக்கொள்ளும் செயலும், காட்டுமிராண்டித் தனமாக இருக்கிறது.

“அவர்களைச் சாகவிடோம்” என்ற நாடகம், “அவர்கள் விடுதலை பெறுவர்” என்ற உண்மை நிகழ்ச்சிக்கு, முன்னுரையாகவே இருக்கிறது, என்று கூறுவோம்.

கொடுமை ஒழிப்புக்கு, இன விடுதலைக்கு, உரிமைக் கிளர்ச்சிக்கு, கலை, கருவியாக்கப்படுகிறது கண்டு, மகிழ்கிறோம். கலையை இத்தகு உயர்தரக் காரியத்துக்குப் பயன்படுத்தும் அளவுக்குத் திறமையும் எழுச்சியும் ஏற்பட்டு விட்டபிறகு, நீக்ரோக்களின் முழுவிடுதலை நிச்சயமாக, விரைவிலே, கிடைத்தே தீரும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

‘கலை’ பிரசாரத்துக்குப் பயன்படுத்தப்படக்கூடாது, அது கலையின் மேன்மையைப் பாழாக்கிவிடுகிறது, என்று கூறும் கனவான்கள்

(5-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு] 14—8—49 [காஞ்சி

# விசாரணை அல்லது விடுதலை

இரண்டு ஆண்டுகள்! இந்தியா சுயராஜ்யம் பெற்று இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்தக் காலத்தில், விரட்டப்பட்ட வெள்ளையர் ஆட்சியைவிட காங்கிரஸ் சர்க்கார் தீவிரமான வகையில் முன்னேறியுள்ளது. ஆம்! முன்னேற்றம்—அதுவும் 'இவர்களா, இப்படிச் செய்வார்கள்?' என்று மக்கள் திகைப்படையும் வண்ணம், முன்னேற்றம்!

மக்கள் வாழ்வுமலர, சுயராஜ்ய மலரின் மணத்தை நுகர, நம்சர்க்கார் வந்து தந்த நலன்கள் என்று எக்களிப்புக்கொண்டு இன்புற்றிருக்கும் வகையில் அல்ல இந்த முன்னேற்றம்! எந்தக்காரியங்களுக்காகத் தாங்கள் போராடுவதாக மக்கள் மன்றத்தில் கர்ஜித்தார்களோ அந்த இலட்சியங்களை உருவாக்கிக் காட்டுவதில் அல்ல இந்த முன்னேற்றம்!

இரண்டு ஆண்டு ஆட்சிக்காலத்தில் 'ஏழை பங்காளர்' என்று சொல்லிக்கொண்ட காங்கிரஸ் ஆட்சியாளர் அடைந்திருக்கும் முன்னேற்றம் ஒரே ஒரு வழியில்தான். அந்த வழி—வெள்ளையர்கள் சென்றவழி. பகத்சிங்கின் பிணம், குமரனின் குருதி, இளங்காளைகளின் இரத்தம் சிந்தும்படி செய்யப்பட்ட வழி. அநியாயவழி என்று இன்று ஆட்சி பீடம் ஏறியவர்களால் ஆர்ப்பரிக்கப்பட்ட வழி. எந்த நாடும், மக்களும் விரும்பாத வழி—விரும்பமுடியாதவழி—ஆம்! அடக்கு முறை வழிதான்—அதில்தான் முன்னேறியுள்ளனர்—அதுவும் வெகு வேகமாக!

காங்கிரஸ் நாட்டின் செங்கோலையேற்று இரண்டாண்டு முடியும் இந்நேரத்தில் எங்கும் அதிருப்தி அனல் வீசுகிறது! சுகம் கிடைக்கும் என்று மக்கள் கட்டியிருந்த மனக்கோட்டைகள் மண் கோட்டைகளாகி விட்டன! எதிர்பார்த்தது எதுவும் கிடைக்காத காரணத்தால் மக்களிடையிலே ஏமாற்றம் எதிரொலிக்கிறது.

ஏழ்மை மாறவில்லை. எங்கும் 'இல்லை, இல்லை' என்ற இல்லாமை கீதம்! 'வீணுக்குழைத்தோமடா' என்ற வீராசாமியின் வேதனைக் குரல், 'கூழுக்கலைகிறோமே' என்ற குப்பன் கூக்குரல் நாட்டின் நாலுபக்கங்களிலும் எழும்பியுள்ளது. எங்கு நோக்கினும் அங்கிருந்தெல்லாம் பசி, பட்டினி, என்ற வேதனை மொழிகளே ஒலிக்கின்றன! 'சுயராஜ்யம் வரும், தொல்லைகள் மறையும்' என்று இருந்த மக்கள் ஆசை காற்றுக்கோட்டை ஆகிவிட்டது. தொல்லைகள் மறையும் என்று நம்பியிருந்தவர்களுக்கு அவைகள் மறையாதது மட்டுமின்றி மேன்மேலும் உருவாவது கண்டு மனம் ஒடியும் நிலை உண்டாகிவிட்டது. காங்கிரஸ் ஆட்சியில் மக்கள் 'கிடைக்கும்' என எதிர்பார்த்தது ஏராளம்! அந்த வகையிலேயே காங்கிரஸ்காரர்களும் நாட்டில் வீரமுழக்கங்கள் செய்துள்ளனர். எனவே ஆட்சி ஏற்பட்டதும் எதிர்பார்த்த நன்மைகள் ஏற்படும் என்று மக்கள் கருதினார்கள். எதிர்பார்த்தனர்; ஆனால் ஏமாற்றம் தான் கிடைத்தது! எதிர்பார்த்தது கிடைக்காமல் ஏமாற்றம் ஏற்படும் போது ஆத்திரம் எழும்புவது இயற்கை. எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்காதது மட்டுமின்றி, எதிர்பாராத இன்னல்கள் மென்மேலும் குவிக்கப்படுமேயானால் குமுறிக் கிடக்கும் உள்ளங்கள் எரிமலை ஆகிவிடும்! ஏழ்மை எரிமலை வெடிக்க ஆரம்பித்தால் அதன் ஆத்திரக் காட்சிகள் 'இன்னபடிதான் நேரக்கும்' என்று கூறமுடியாது.

இதேநிலைதான் இன்று நாட்டில் இருப்பது. பாடுபட்டும் பலன் கிடைக்காத பாட்டாளி! இடுப்பொடியவேலை செய்து, உலர்ந்து சருகாகியும், ஒருவயிற்று உணவுக்கு வழியின்றி வாடும் தொழிலாளி! தொல்லை மேல் தொல்லைகள் பாய, துயரை அடக்க முடியாது குமுறிக் கொந்தளிக்கும் மக்கள் கூட்டம்!

மாளிகை — மண்குடிசை.

இரண்டுக்குமிடையிலே இருக்கும் தூரம்மாறவில்லை; மாறுதது ம... மல்ல குறையவும் இல்லை. அதற்கு... பதில் அதிகமாகிக்கொண்டே ... கிறது! அதற்கான வசதிப் பா... களையும் முதலாளித்துவ கூடா... ஆகிவிட்டகாங்கிரஸ் ஆட்சி அமை... துக் கொண்டே போகிறது! என... பொதுவாக ஏழ்மைக்கு உறைவி... மான நாட்டில் ஆளவந்தாரு... மக்களிடையிலே மதிப்புக் குறைந்... எதிர்ப்பு முன்னணிகளின் ப... பன்மடங்கு அதிகரித்து வருகிற...

எதிர்க் கட்சிகள்—அதுவும் கா... கிரசைவிட கொள்கைத் தீவி... கொண்ட எதிர்க் கட்சிகள்—பக்... மக்கள் மனம் சாய்கிறது! இ... மாற்றத்தைக் கண்ட ஆட்சியா... மக்களிடையிலே 'இந்நிலை ஏற்ப... காரணம் என்ன?' என்பதை சிந்... கவே எண்ணவில்லை. காரணத்தை... கண்டு அதைப் போக்கி நல்வ... நாடவும் கருதவில்லை. அதற்கு... பதிலாக மக்கள் மனம் எங்கு சா... கிறதோ அந்தக் கட்சிகளை அடக்... வதிலேயே நாட்டஞ் செலுத்தி... பாதுகாப்புச் சட்டம் போன்... பாணங்களை 'அவசரச் சட்ட' உ... வில் ஏவி வருகின்றனர்! இல்லாமை... நிறைந்த நாட்டில் அதை எதிர்த்... ஒழிக்கத் திட்டம் கொண்டுள்... கட்சிகள் பக்கம்தான், வேதனைப்ப... மக்கள் மனம் தாவும். ஒருவ... மாடியிலும் பலர்தெருக்கோடியிலு... கிடந்தால் 'ஏன் நாம் மாடியில் ஏ... கூடாது?' என்ற எண்ணம் எழு... பத்தான் செய்யும்! பொது உ... மையும் சம உரிமையும் நாம் பெ... வேண்டும் என்ற ஆவல் க... புரண்டு வரத்தான் செய்யும்!

அதிலும் ஆளும் கட்சி பிற்போ... கில் விரைந்து கொண்டிருக்கு... போது, அக்கட்சியால் நன்... கிடைக்கும் என நம்பி ஏமா... மக்கள், இதுகாறும் தாங்கள் சென்... பாதையை விடுத்து எதால் ப... கிடைக்கும் என எதிர்பார்க்கி... களோ அந்தக் கொள்கைகள்—கட்... கள்—பக்கமே சேர்வர்.

இதைக் கண்டு, பலம் பறி போ... றதே, என்ற வேதனை தாக்க ஆ... திரம் கொண்டு அதிகாரம் கை... விருக்கிறது என்ற காரணத்தி... அடக்குமுறை ஆயுதங்களை எ... மக்கள் மனம் சாயும் எதிர்க் கட்...

களை அடக்கி ஒடுக்கி ஆட்படுத்த நினைப்பது கேலிக்கூத்தே ஆகும்!

வெள்ளத்தை 'மணல் மூட்டை'யால் தேக்கிவிட முடியாது! அவசரச் சட்டங்கள் மக்களின் மனஉறுதிக்கு முன்பு சிறு துரும்புகள்தான். இது இன்றைய ஆட்சியாளர் அறியாததல்ல! பாதுகாப்புச் சட்டங்கள் பலனளிக்காது அதனால் மக்கள் மனக் கசப்பே வளரும் என்ற பாடம் காங்கிரஸ் பீடத்துக்கு தெரியாதது என்று கூற முடியாது. இருந்தும் எது கூடாது என்று முழக்கமிட்டார்களோ அந்த வழியிலேயே ஆட்சியாளர் முன்னேறிக் கொண்டுள்ளனர்; அந்த வழி 'வீழ்ச்சி' என்ற பாதாளத்திற்கே இட்டுச் செல்லும் என்பது அறிந்தும்!

இந்த மனப்போக்கு காரணமாகவே நாட்டில் ஆயிரக் கணக்கான எதிர்க் கட்சித் தோழர்கள்—தலைவர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைதிகளாக வைக்கப்பட்டிருக்கின்றனர். குற்றம் சுமத்தப்படாமலும், விசாரணை செய்யப்படாமலும், நினைத்ததும் பிடித்துக் கொண்டு போய் சிறையில் தள்ளுவதே வழக்கமாக நடந்து வருகிறது! பல மாதங்கள்—ஏன்? வருடங்கள்—ஆகியும் கைது செய்யப்பட்டவர்களை விசாரணை செய்யாமலே வைத்திருக்கின்றனர். சுதந்திரமான நாட்டில் சுதந்திரமாக வாழக்கூட, சுதந்திரத்துக்காகப் போராடிய ஒரு கட்சியின் ஆட்சி, வகை செய்யவில்லையென்றால் அது மிக மிகப் பரிதாபமானதாகும்—வெட்கி வேதனைப்படக் கூடியதாகும்!

கைது செய்யப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கும் கம்யூனிஸ்டுத் தோழர்கள் பலர் ஆங்காங்கு உயர்நீதி மன்றங்களால் தினசரி விடுவிக்கப்பட்டு வருகின்றனர். எனவே, நீதி 'அவர்களை அடைத்து வைப்பது தவறு' என்று கூறுகிறது! எனவே அவர்களை விசாரணை செய்யாமலும், விடுவிக்காமலும் வைத்திருப்பது நீதிக்கு முரண்பாடானது என்று விளங்கி வருகிறது! அப்படியிருந்தும் 'சுயராஜ்ய, சர்க்காரின் போக்கு பாதுகாப்புச்சட்டத்தைப் பலப்படுத்தும் பாதையில்—பகையுணர்ச்சிப்பாதையில் தான் போய்க்கொண்டிருக்கிறது!

* * *

பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் காவல் கைதிகளாக சிறையில், நம்மாகாணத்தைப் பொறுத்தமட்டில் ஆயிரக்கணக்கில் அடைத்துவைக்கப்பட்டிருக்கின்றனர், கம்யூனிஸ்டுகள் என்ற காரணத்தால்!

அப்படி அடைத்துவைக்கப்பட்டிருக்கும் காவல்கைதிகளுக்குச் சாதாரண சிறைவசதிகளும் மறுக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

நாட்டை ஆளும் நாயகர்களாக விளங்கும் காங்கிரஸ்காரர்களும், சிறைவாழ்வை அனுபவித்தவர்கள்தான்! காவல் கைதிகளாக அவர்கள் இருக்க நேரிட்டபொழுது எத்தனையோ தடவைகள் சிறையில் சாதாரண வசதிகள் கூடச் செய்யப்படவில்லை என்பதற்காகக் கிளர்ச்சிகள் செய்து அவைகளை அடைந்தவர்கள் தான். அப்படியிருந்தும் எந்த வசதிகள் தங்களுக்கு அளிக்கப்படவில்லை என்பதற்காகப் போராடினார்களோ, அதேவசதிகளை "எதிர்க்கட்சி" என்ற காரணத்திற்காகக் காவல்கைதிகளாக இருப்பவர்களுக்கு மறுத்தார்கள் என்றால், அது நேர்மைக்கு முரண்பாடான காரியமாகும்! நிச்சயம் வெட்கித் தலைகுனிய வேண்டிய நிகழ்ச்சியுமாகும்!

உறவினர்களைப் பேட்டி காணும் உரிமை, கடிதம் எழுத அனுமதி, வைத்திய வசதி, குடும்பங்களுக்கு அலவன்சு, ஆகிய வசதிகள் தங்களுக்கு அளிக்கப்படவில்லை யென்பதாக காவல் கைதிகள் குறை கூறுகின்றனர்.

மனைவியைக்காண அனுமதி மறுக்கப்பட்டது.

அபாயகரமான உடல்நிலையிலுள்ளவர்களுக்கு போதிய வைத்திய வசதி இல்லை.

கைதிகள் பிரித்துவைக்கப்பட்டு வேதனைக்குள்ளாக்கப்படுகிறார்கள்.

என்பதாகவெல்லாம் பாதுகாப்புக்கைதிகளின் "குறைப்பட்டியல்" இருக்கிறது!

இந்தக் குறைகள் நிவர்த்திக்கப்படவேண்டுமெனக் கோரப்பட்டும் பலன் கிடைக்காமையால் பல இடங்களில் பட்டினி போராட்டம் நடத்தவும், காவல் கைதிகள் தொடங்கியிருப்பதாகத் தகவல்கள் கூறுகின்றன. வசதிகள் கோரி வாதாடும் காவல் கைதிகள்மீது போலீசாரைக் கொண்டு பலாத்காரச் செயல்கள் தூண்டப்படுவதாக அகில இந்திய தொழிற்சங்கத்தலைவர் தோழர் வி. சக்கரை, ஆக 9-ந்தேதியன்று விடுத்துள்ள அறிக்கையொன்றில்குறிப்பிடுகிறார். அந்த அறிக்கையில் காவற் கைதிகள் அதிகாரிகளால் மிரட்டப்படுவதாகவும் குறிப்பிட்டு, "வேலூரில் 250 கைதிகளுக்கு காயம் ஏற்பட்டிருக்கிறது, பலருக்குப் பலத்த காயம் என நம்பகமான தகவல்கள் கூறுகின்றன. காயமடைந்த கைதிகளுக்கு மருத்துவ வசதி கிடையாது ஆயுதப்போலீஸ் சிறையினுள் செய்யும் அட்டகாசத்தை வெளியிலிருப்போர் யாரும் அறியமுடியாது" என்று கூறியுள்ளார்.

ஒரு மாகாணத்திலிருந்து இன்னொரு மாகாணத்துக்கு கைதிகளை மாற்றிக்கொண்டுபோய் அடைக்கலாம் என்பதாகச் சமீபத்தில் இந்திய சர்க்கார் ஒரு அவசரச்சட்டத்தைப் பிறப்பித்துள்ளனர்.

இங்குள்ள கம்யூனிஸ்டுக் காவல் கைதிகளைப் பிரித்துவைக்கும் நடவடிக்கைதான் அது என்றுகூறி ஜூலை 21, 22, தேதிகளில் வேலூர்சிறையில் காவல் கைதிகள், அதிகாரிகள் கட்டளைக்கு மறுத்துவன்மைகொண்ட மட்டும் போராடியதாகவும் அதன் காரணமாகவே மேற்படி கைதிகள் ஆயுதப் போலீசாரால் காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது.

ஆனால், அரசாங்கமோ இதுபற்றி வெளியிட்டிருக்கும் அறிக்கையில் பாதுகாப்புக் கைதிகள் சட்டவரம்பைமீறிய பலாத்கார நிகழ்ச்சிகளில் ஈடுபட எத்தனித்ததாகவும், கைதிகள்வசம் துப்பாக்கிகள் இருந்ததாகவும், கையில் கிடைத்ததையெல்லாம்கொண்டு தாக்க முற்படுவதாகவும், கூறப்படுகிறது.

காவல் கைதிகளோ அதிகாரிகள் தொல்லை பொறுக்கமுடியவில்லை என்கின்றனர்!

சர்க்காரோ, பாதுகாப்புக் கைதிகள் பலாத்காரத்தில் ஈடுபடுவதாக அறிக்கை வெளியிடுகின்றனர்!

இரண்டும் ஒன்றுக்கொன்று நேர்முரணாக இருக்கிறது.

எது உண்மை என்று மக்களுக்கு விளங்கும்படி செய்ய வேண்டியது சர்க்காரின் கடமை

மட்டுமல்ல, பொறுப்புமாகும். இல்லையெனில் வளரும் மனக்கசப்பு, விரியவே ஏதுவாகும். "உண்மையாக என்ன நடந்தது?" என்பதைக் காணும் வகையில் பாரபட்சமற்ற, சர்க்கார் சார்பில்லாத நடுநிலைமையாளர்களைக் கொண்டு விசாரணை நடத்தப்பட வேண்டும். இந்நிகழ்ச்சிகள் பற்றி விசாரணை செய்யப்பட்டு உண்மை அறிவிக்கப்பட வேண்டியது அவசியம்; நேர்மையான முறையும் அதுதான்!

ஏனெனில் சட்டவரம்பை மீறிய நிகழ்ச்சிகள் அதிகரிக்க வழியேற்படுமேயானால் நாடு 'பர்மா' ஆகிவிடும்! ஒழுக்கம் மறைந்து, எங்கும் கலவரமும், கண்மூடிப் போக்கும் தாண்டவமாடத் துவங்கிவிடும்! எனவே காவல் கைதிகள் துன்புறுத்தப் படுகிறார்கள் என்றால், வெளியிலுள்ள மக்கள் ஆத்திரம் கொள்ளவே செய்வார்கள். ஆத்திரம் அதிகரிக்குமேயானால் விளைவு, வேதனையாகவே மாறிவிடும். எனவே இந்தச் சிறை சம்பவங்கள் பற்றி பாரபட்சமற்ற விசாரணை செய்யப்பட வேண்டும்; அதிலும் நிலைமை மாறுமுன் அவசரமாகச் செய்யப்படவேண்டும்!

பலாத்காரம், தனி மனிதர்களின் சுதந்திரத்துக்கு விளைக்கும் தீங்கு. ஆயுதந் தாங்கியோ, அட்டகாச காரியங்களில் ஈடுபட்டோ நினைத்த கொள்கைகளைச் சாதிக்க முற்பட்டால்—அது நிச்சயம் வெற்றியளிக்காது. மக்களிடையிலே செல்வாக்கு காணவும் முடியாது. தடிகொண்டு தாக்கியோ, தகாத வழிகளில் பயமுறுத்தியோ தங்கள் கொள்கைகளில் வெற்றி காணலாம் என கம்யூனிஸ்டுகள் கருதுவார்களேயானால், அது கண்டிக்கப்படவேண்டியது மட்டுமல்ல; வெறுத்து ஒதுக்கப்பட வேண்டியதுமாகும். "புரட்சி" என்ற வார்த்தைக்கு இரத்தம் சிந்தி, எங்கும் பிணக்குவியல்கள் ஏற்படச் செய்ய வேண்டும் என்பதல்ல பொருள். பிற்போக்கு எண்ணங்கள் முறியடிக்கப்பட்டு முற்போக்குக் கொள்கைகள் தலைதூக்கி வெற்றி விழா கொண்டாடும் அளவில் பழைமையை ஓட்டி புதுமையைக் காண்பது தான் 'புரட்சி' ஆகும்! கத்தியும், அரிவாளும் தூக்கி, மண்வெட்டியும் கோடரியும் தாங்கி 'வாழப் பிறந்த' மக்கள் ஒருவரை யொருவர் தாக்கி, மனமாச்சரியம் காரணமாக, வெட்டி வீழ்த்திக்கொண்டு மடிவார்களேயானால், நாடு பிணக்காடு ஆக முடியுமே தவிர லட்சியம் நிறைவேறமுடியாது. லட்சியங்கள் மக்களின் நல்வாழ்வுக்காகத்தான்.

இலட்சியப் போர்வையில் பலாத்காரச் செயலில் ஈடுபடுவதால் எவரும் இலட்சியத்தைச் சாதித்துவிட முடியாது. ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்ள வெறி பயன்படுமே அன்றி வெற்றிக்குப் பாதையமைக்காது.

நாட்டை பிணக்காடு ஆக்குவதால் யாருக்கு இலாபம்? மாளிகையை உரிமையாக்க வேண்டுமென்பதற்காக அதைச் சூழ்ந்து, உடைத்து தகர்ப்பதால் என்னபயன்? மாளிகை நாசமாகும். பலன் கிட்டாது. அது போலவே மக்கள் வாழ்வை மலர வைக்கும் நோக்கம் கொண்டவர்கள் மக்களிடையிலே பயத்தையும், பீதியும் 'என்ன நேருமோ எப்போது உயிருக்கு ஆபத்தோ?' என்றகலவரத்தையும் சிருஷ்டிப்பதால் எதிர்பார்க்கும் எண்ணம் கைகூடவா செய்யும்? எனவே நாட்டை நல்பாதைக்கு இட்டுச் செல்லும் பெரும்பணியில் இறங்கியிருப்பவர்கள், நாச காரியங்களில் இறங்குகிறார்கள் என்றால் அது நிச்சயம் தவிர்க்கப்படவேண்டியது தான். தடுத்து நிறுத்தப்பட வேண்டியதுதான்!

ஆனால், "நாச காரியங்கள்" என்ற காரணங்காட்டி எதிர்க்கட்சிகளைத் 'தீர்த்துக் கட்டிவிட' எண்ணி சர்க்கார் முனைந்தால் அது மிகவும் கேடு விளைவிக்கும் செயலாகும். நாட்டை ஜனநாயகச் சோலையாக ஆக்குவதற்குப் பதில் சர்வாதிகாரப் பாலையாக ஆக்க முனைவதே ஆகும்!

"கம்யூனிஸ்டுகள் வேட்டை" "பிடாரிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்" என்ற அளவுக்குப் பிரச்சாரப் பீரங்கிகள் மூலம் அவர்களை ஒழித்து விடலாம் என்று நினைத்தால் அது பகற் கனவு ஆகுமேயொழிய பயன் அளிக்காது.

கம்யூனிஸ்டுகளும் மனிதர்கள் தான். மக்கள் வாழ்வுக்கு உழைக்கும் இலட்சியவாதிகள்தான். அவர்கள் ஆசை நாட்டை பயங்கரப் பீதியின் மத்தியில் வைக்கவேண்டும் என்பதுதான் என்று கூறப்படுவதை நம்மால் ஏற்கமுடியவில்லை. காரணம் அவர்களும்இலட்சியவாதிகள். அவர்கள் இலட்சியம் இவ்வளவு 'சுருங்கியது' ஆக இருக்கும் என நம்மால் நம்ப முடியவில்லை! வைக்கோல் போரைக் கொளுத்திவிடுவதால் பொருள் நாசமாகி, மறுநாள் தங்கள் — உழைப்பாளிகள் — மாடுதானே திண்டாட வேண்டிவரும் என்பதை அவர்கள் அறியமுடியாதவர்களல்ல. ஒருவருக்கொருவர் பலாத்காரத்தைத் துணைகொண்டு வெட்டி வீழ்வதால் 'இலாபம்' முதலாளித்துவ வர்க்கத்துக்குத் தான் என்பது அவர்களுக்கு தெரியாத சங்கதியாக இருக்கமுடியாது.

எனவே எதற்கெடுத்தாலும் ஒரு பூச்சாண்டியைக்காட்டி எதிர்க்கட்சிகளை அடக்க சர்க்கார் முனையக்கூடாது. ஆட்சி கையிலிருப்பதால் பாதுகாப்புச் சட்டங்களை "அவசரமாகப்" பிறப்பித்து வாழமுடியும் என்பது நிலைத்து நிற்கமுடியாது. எதிர்க்கட்சிகளை நசுக்க இந்தபாதுகாப்புச்சட்டங்கள் என்றும் பயன்படாது. மக்கள் ஆதரவுதான் கேடயமாக இருக்கவேண்டும் சட்டங்கள் கோட்டைகளல்ல; பாதுகாப்புப் பெற்று வாழ!

இதை ஆட்சியாளர்சிந்திக்கவேண்டும். காவல்கைதிகளைக் கண்ணியமாக நடத்தவேண்டும். பாதுகாப்புச் சட்டமூலம் கைது செய்தவர்களை விசாரணை செய்து, சட்ட பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் அவர்களை விடுதலை செய்யவேண்டும். இதுதான் நீதி. இதுதான் முறை! ✲

## மறுப்பு

தங்கவயல் தமிழர் நாடக குழுவினரால் கடந்த 8—8—49 அன்று வேலூர் முள்ளிபாளையம் நாடகத் தியேட்டரில் 'நீதி மன்றம்' என்ற நாடகம் சி. என். அண்ணாதுரை முன்னிலையில் நடைபெறும் என்பதாக விளம்பரப்படுத்தப் பட்டிருந்ததாக நம் கவனத்துக்கு வந்துள்ளது. நாடகம் நடைபெறும் என்பது பற்றியோ, நடத்துவது யார் என்பது குறித்தோ நமக்கு எதுவும் தெரியவராது. இந்தவிதமான காரியங்களில் ஈடுபடும் நபர்கள் அநாவசியமாக மனச் சஞ்சலத்தை நமக்கும், மக்களுக்கும் உண்டுபண்ணுவது கண்டிக்கத்தக்கதாகும்.

(ஆ—ர்)

# செல்லாக் காசாகிறது!

அதிகார ஆசை, சுயநலச்சூது, கோஷ்டிப்பிளவுகள், பேராசைச்சண்டைகள், இன்று காங்கிரஸ்கட்சியின் நித்திய நிகழ்ச்சிகளாகிவிட்டன! மக்கள் நலனே தங்கள் லட்சியம் என மார்தட்டிப்பேசி, பொது வாழ்வில் சிறப்புப்பெற்ற காங்கிரஸ் கட்சியின் இன்றைய நிலை இமயம் முதல் குமரி வரை எல்லா மாகாணங்களிலும்கண்ணாடியாக இருக்கிறது! நாட்டின் வாழ்க்கைக்குப் பிரச்னைகளில் கவனம் செலுத்தி மக்கள் மேம்பாட்டுக்கு வகை கெய்யவேண்டிய ஆளவந்தார்களுக்குத் தங்கள் "சொந்த" விவகாரங்களைக் கவனிக்கும் பொறுப்பே பெரும் பிரச்னை—தலைவேதனையாக ஆகிவிட்டது!

காங்கிரஸ் ஆட்சி நடைபெறும் எல்லாமாகாணங்களிலும் ஊழல்களும், ஊதாரிக் காட்சிகளும் தலைவிரிகோலமாகத் தாண்டவம்புரிகின்றன. விவரிக்கமுடியாத அளவில் சுயநலமும் லாபநோக்குமே லட்சியங்களாகமாறிவிட்ட காரணத்தால்,ஒவ்வொரு மாகாணக் காங்கிரசிலும் போட்டா போட்டியும், பொருமலும் புகைச்சலும், குடுமி பிடிச்சண்டையுமே கொந்தளித்துக்கிடக்கின்றன.

"சுயராஜ்யம் ஒன்று வருகுதாம். அங்கு சுகவாழ்வு மலருதாம்"என்று எண்ணி ஆசைக்கனவுகளுடன் இருந்த மக்கள், இன்று ஆளவந்தார்களின் கெடுபிடியும், அடக்கு முறை அட்டகாசம், வரிக்கொடுமையும்தாங்காது தத்தளிக்கின்றனர். காங்கிரஸ் கட்சியால் நல்வாழ்வு மலரும் என்று அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கை கரைந்து, வெறுப்பாகமாறத்துவங்கிவிட்டது!

மக்களிடையிலே காங்கிரஸ் என்றாலே ஏற்படும் அருவருப்பு,அசூயை ஆத்திரம் ஆகியவைகளை கல்கத்தாவிலும், பம்பாயிலும் நடைபெற்ற சட்டசபை உபதேர்தலில் காங்கிரஸ் மண்ணைக்கவ்விய காட்சி அப்பட்டமாகப்பிரதிபலித்துக் காட்டிவிட்டது.

மக்களின் மனநம்பிக்கைபறிபோய் அவர்கள் ஆத்திரம் அருவியென பெருக்கெடுத்துத் திருளுவதைக் கண்ட காங்கிரஸ் கட்சியினரிடை கலக்கம் உருவாகியுள்ளது. ஆட்சிப் பீடம் எங்கு அசைந்துபோய்விடுமோ என்ற அச்சம் ஆளவந்தார்களை ஆட்டத்துவங்கிவிட்டது!

எனவே காங்கிரஸ் ஆட்சியாளர் சரிந்த கோட்டையாகிக்கொண்டிருக்கும் தங்களது நிலைமையைச் சரிப்படுத்திக்கொள்ளவேண்டிய அவசிய—அவசர நிலைமைக்குவந்துள்ளனர்.

ஆட்சிப்பீடம் அமர்ந்தது முதல் இன்றுவரை ஆட்சியாளர் மக்கள் வாழ்வுக்கான வகைகளைச்செய்வதை விட, தங்கள் சுட்கட்சியின் சரியும் நிலைமையைச் சரிக்கட்டுவதிலேயே அதிக கவனம் செலுத்திவந்துள்ளனர்.

நிர்வாக ஊழல், திறமையின்மை காரணமாக மக்களிடையிலே தங்களுக்கு இருந்த செல்வாக்கு கரைகிறது, சினமும் சீற்றமுமே பரிசாக உருவாகிறது, என்பதைக்கண்டகாங்கிரஸ் தலைவர்கள் மக்கள் கவனத்தை வேறுதிசைகளில் திருப்பிவிடுவதிலேயே நாட்டம் கொண்டுவந்துள்ளனர்.

கம்யூனிஸ்டுகள் ஆபத்து!

காஷ்மீரப் போராட்டம்!

சமஸ்தானங்கள் ஐக்கியம்

ஐதராபாத் பிரச்னை

மேற்படி நாட்டத்தின் விளைவுகளே இவைகள். சிறுசம்பவத்தையும் செயலையும் பிரமாதப்படுத்தி "சர்க்காரின் சாதனை" என்று 'கொட்டை எழுத்துக்களில் விளம்பரப் படுத்தியும் விளைவு — ஏமாற்றமாகவே ஆகிவருகிறது!

பாதுகாப்புச்சட்டப்பாணம், அடக்குமுறை அம்புகள் ஆகியவைகளால் எதிர்க்கட்சிகளின் "வாயை மூடும்" திருப்பணியில் ஈடுபட்டும் ஆளவந்தார் எண்ணம் வெற்றியளிக்கவில்லை. எதிர்பார்த்ததற்கு மேலாக மக்கள் மன்றத்தில் எதிர்ப்பும், ஆத்திரமுமே வளர்ந்து வருகிறது!

இந்த இக்கட்டான நிலைமையைச் சமாளிக்கும் ஆசையின் காரணமாக தங்களின் பரிசுத்தத்தன்மையை வெளிப்படுத்திக்கொள்வதாக "காட்சிகளைக்"காட்ட முனைந்துள்ளனர்.

சென்னை மந்திரிசபை விசாரணை, மேற்குவங்கத்தில் பொதுத் தேர்தல் முதலியவைகள் தங்கள் தவறுகளை மறைக்க காங்கிரசார் நடத்தும் நாடகத்தின் காட்சிகளாகும்!

இந்த நாடகத்தில் குறிப்பிடக் கூடியது மேற்கு வங்காளத்தில் பொதுத் தேர்தல் நடத்துவதென்ற காங்கிரஸ் காரியக் கமிட்டி தீர்மானத்தை யொட்டி செய்யப்பட்டிருக்கும் முடிவாகும். அடுத்த ஆறு மாதங்களில் புதிய—பொதுத்தேர்தலை 'மேற்குவங்கத்தில் நடத்துவதென்பதே மேற்படி முடிவு. மேற்கு வங்கத்தில் காங்கிரசாரிடையே ஏற்பட்டுள்ள கட்சிச்சண்டைகளை மறைக்கச் செய்யும் நாடகம்தான் இப்பொதுத் தேர்தல். மேல்வங்க மந்திரிசபையிலும் சட்டசபையிலும் சென்னையை விட மோசமான அளவில் கோஷ்டிச்சண்டையும், பூசலும் நர்த்தனமாடுகின்றன! மாகாணக் காங்கிரசிலும் மறைக்கமுடியாத அளவில் போட்டியும், போராட்டமும் உருவாகி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துவருகின்றன!

இந்த மோசமான ஒற்றுமைக் குலைவு—தேர்தல் என்றதும் சீர்திருந்தும் என்பதே இத்தேர்தலின் உள் நோக்கமாகும். அது மட்டுமின்றி, தென்கல்கத்தாவில் நடைபெற்ற உப-தேர்தலில் காங்கிரஸ் மண்ணைக்கவ்வி, சரத்போஸ் வெற்றிபெற்றதானது இந்தியாவில் மட்டுமின்றி வெளி நாடுகளிலும் 'காங்கிரஸ் கரைகிறது' என்பதைக் கண் கூடாக்கிவிட்டது. எனவே பொதுத் தேர்தல் நடத்தித் தங்கள் "நேர்மை"யைக் காட்டுவதுபோல நடிக்க முடிவு செய்துள்ளது காங்கிரஸ்.

கிட்டத்தட்ட இன்னும் ஒன்றரை ஆண்டுக்குள் இந்தியா முழுமைக்கும் பொதுத் தேர்தல் நடைபெறவிருக்கிறது, வடது வந்தோருக்கு

வாக்குரிமை என்ற அடிப்படையில். இந்நிலையில் தங்களுக்கு நாட்டிலுள்ள செல்வாக்குக் குறைவை மறைப்பதற்காகச் செய்யும் ஒரு செயல்தான் இந்தப் பொதுத் தேர்தல் என்பதை ஆட்சியாளரின் போக்கே எடுத்துக் காட்டுகிறது.

வயதுவந்தோருக்கு வாக்குரிமை என்ற அடிப்படையில் வாக்காளர் பட்டியல் தயார் செய்யப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமான அலுவல்கள் இன்னும் ஆறுமாதங்களுக்குள் முடிந்துவிடும். இந்நிலையில் பொதுத் தேர்தல் நடத்தத் திட்டமிட்டிருப்பதோ புது வாக்காளர் பட்டியல்படி அல்ல; 1935-ம் ஆண்டு பழைய பட்டியல்படி! 1935க்குப் பின் மேற்கு வங்கம் எத்துணையோ அரசியல் நிகழ்ச்சிகளைச் சந்தித்துள்ளது. பிரிவினையின் பலனாக லட்சத்துக்கு மேற்பட்டு மக்கள் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. மக்கள் மாற்றத்தையும் கவனித்துக் கணக்கெடுத்து இந்தப் பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்று கூறப்படுகிறது. இந்தக் காரியத்துக்கெனச் செலவழியும் நேரத்தில் புது வாக்காளர் பட்டியலைத் தயார் செய்து அதன்படி — வயது வந்தோருக்கு வாக்குரிமை என்ற அடிப்படையில்— தேர்தலை நடத்துவதென்பது கஷ்டமான காரியமல்ல. ஆனால், காங்கிரஸ் காரியக் கமிட்டியோ அதைப்பற்றிக் கவனிக்காதது போலப் பழைய வாக்காளர் பட்டியல்படியே தேர்தலை நடத்த யோசனை—இல்லை! — உத்திரவு இட்டுள்ளது!

ஏன், இந்த அவசர நிலை? தேர்தல் நடைபெறும் இடைக்காலத்தில் தற்போதுள்ள மந்திரி சபைக்குப்பதில் புதுமந்திரிசபை ஒன்று இயங்கும் என்பதாகவும் காங்கிரஸ் மேலிடம் முடிவுசெய்துள்ளது. இந்த இடைக்கால மந்திரி சபையால் எதிர்பார்க்கப்படும் நன்மை என்ன ஏற்பட்டுவிட முடியும்? தற்போது மேல் வங்கம் உள்ள சீர்கெட்ட நிலை இன்னும் அதிகரிக்க, வேதனை விரிய வழி பிறக்குமே ஒழிய மக்களின் அவதி மறைய வகை ஏற்பட முடியாது!

பொதுத் தேர்தலுக்கு இடையில் ஏற்படுத்தப் போகும் இந்த இடைக்கால மந்திரி சபை, மக்கள் பிரச்னைகளைத் தீர்க்க வகை செய்யாது— முடியாது என்பதோடு இந்தமந்திரி சபை 'இடைக்காலத்துக்குத்தானே' என்ற ஏளனம் அதிகார வட்டாரங்களில் எதிரொலிக்கவே செய்யும். இதன் விளைவு மென் மேலும் மேல் வங்கத்தில் நிர்வாகம் சீர்குலைந்து தொல்லைப்புயல் வீசச் செய்யுமே அன்றி மக்கள் சங்கடம் தீர்க்கப் போவதாக அமையப் போவதில்லை!

இவ்வளவு அவசரமாக காங்கிரஸ் காரியக் கமிட்டி மேற்கண்ட விதமாக முடிவுகளைச் செய்துள்ளது. இந்த முடிவுகளின் பலன்களைப் பற்றி நாம் சிந்திக்கு முன் இத்தகைய முடிவுகளைச் செய்து ஒரு மாகாண ஆட்சியை மாற்றி — புதிதாக ஒன்று ஏற்படும்படி உத்தரவிட காங்கிரஸ் காரியக் கமிட்டி யார்? அதற்கு இத்தகைய அருகதையுண்டா? என்பதை கருத்தில் வைத்துப் பார்த்தால் காங்கிரஸ், நாட்டை எந்த அளவுக்கு சர்வாதிகாரப் போக்கில் இழுத்துச் செல்கிறது என்பது விளங்கும்!

ஒரு அரசியல் கட்சி பெரும்பான்மையான பிரதிநிதித்துவம் பெற்று ஆட்சிப்பீடம் அமர்ந்துவிட்டதென்றால், அப்படி ஆட்சியில் அமர்ந்தவர்கள் எல்லா மக்களுக்காகவும் இருக்கிறார்கள் என்பதே பொருளாகும். இதுதான் அரசியல் விதியுங்கூட! ஒரு அரசியல் கட்சி இன்று ஆட்சியிலிருக்கும்; நாளை போய் விடும்!

ஆனால், நாடு அப்படிப்பட்டதல்ல; நாட்டை இயக்கும் ஒரு அரசாங்கமும் அப்படிப்பட்டதல்ல. இவைகள் என்றும் நிரந்தரமானவை. வரும் கட்சிகள் இவைகளை இயக்கிச் செல்லுமே ஒழிய, மாற்றிவிட முடியாது. மக்களின் பிரதிநிதித்வம் பெற்றவர்கள் ஆட்சிபீடம் ஏறுவார்கள். மறு தேர்தல் வந்து, மக்கள் எண்ணம் மாறி, தீர்ப்பு வேறுவிதமானால் இன்னொரு கட்சி அரசாங்கத்தை ஏற்று நடத்தும். இதுதான் ஜனநாயகம்.

பெரும்பான்மையான பிரதிநிதித்வம் பெற்று அரசாங்கத்தை ஏற்று நடத்த முற்பட்டுவிட்டால், அப்பொறுப்பை யேற்றவர்கள், நாட்டிலுள்ள எல்லா மக்களுக்காகவும் ஆட்சியை நடத்துகிறார்கள் என்றே அர்த்தம். எனவே ஆள்பவர்கள் தங்கள் கட்சிக்காரர்கள் என்பதற்காக அந்தக் கட்சி அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் தலையிடுவது தகாது—கூடாது. இது பார்லிமெண்டரி முறை.

இதைத் தவிர்த்து ஆளும் கட்சி எல்லா அரசாங்கக் காரியங்களையும் தலையில் போட்டுக்கொண்டு, செய்ய முற்படுகிறதென்றால், அந்த அரசியல் கட்சி நாட்டைத்தன் பிடிக்குள் கொண்டுவருகிறது; சர்வாதிகாரத்துக்கு வித்திடுகிறது; எதேச்சாதிகார ஆசைக் கிணற்றில் குதிக்கிறது என்றுதான் பொருள்.

இந்த விதி முறைப்படிப் பார்த்தால் பெரும்பான்மை வாக்குகளால் ஆட்சிப் பீடம் ஏறி அரசாங்கத்தை ஏற்று நடத்தும் காங்கிரஸ் கட்சி பாசிசப் போக்கில் விரைந்து செல்லும் வேகம் விளங்கும்!

நடை முறையில் வேலைகளைச் செய்துவரும் ஒருசட்ட சபையைக் கலைத்துப் புதுத் தேர்தல் நடத்தும்படியான சூழ்நிலை ஏற்பட்டு, அப்படிச் செய்யவேண்டுமென்றால் அதற்கான அதிகாரம் மாகாணத்தின் கவர்னருடையது.

மாகாண விவகாரத்தில் மத்திய சர்க்கார் மேற்சொன்ன விதமாக விரும்புகிறதென்றால் அப்படிச் செய்யுமாறு கவர்னர் ஜெனரல்தான் மாகாண கவர்னருக்கு யோசனை கூறலாம். யோசனை கூறலாமே தவிர, அப்படிச் செய்யுமாறு நிர்ப்பந்திக்க முடியாது! இதுதான் சட்டம். ஜனநாயக முறை.

காங்கிரஸ் ஆட்சியின் கேவலநிலை மேற்கு வங்கம் ஒன்றில் மட்டும்தான் என்றில்லை. எல்லா மாகாணங்களிலும் இதே நிலைதான்! அப்படியிருக்க அவசரமாக, நேர்மையில்லாத வகையில், புதுத் தேர்தல் என்கிற 'நாடகத்தை' நடித்துக் காட்ட காங்கிரஸ் மேலிடம் முனைந்துள்ளது. இவ்வளவு வேகமாக ஒரு மாகாண விவகாரத்தில் தலையிட்டு ஒரு 'நாடகம்' நடத்திக் காட்டும்படியான அளவுக்கு காங்கிரஸ் மேலிடம் ஈடுபடும்படி ஏற்பட்டிருக்கும் நிலைமையைக் கூர்ந்து நோக்கினால் விளங்கும் உண்மை 'காங்கிரஸ் கட்சி மக்களிடையே செல்லாக் காசாகி வருகிறது' என்பதுதான்!

**முகவரி மாற்றம்**

இரா. நெடுஞ்செழியன்
C/o "மாலை மணி"
2/45, முத்துமாரி செட்டிதெரு
மண்ணடி சென்னை, 1.

# ★ நான் கண்ட அழகர்சாமி ★

தொடர்ச்சி—11

எஸ். வி. லிங்கம்

நமது இயக்கம் இருபத்தைந்து ஆண்டுப் பயிர்! இயக்கத்தின் முக்கிய வார இதழான "குடி அரசு" 1925ம் ஆண்டில்தான் ஆரம்பிக்கப்பட்டது. அவ்வாண்டிலேயேதான் ஜஸ்டிஸ் கட்சியின் உண்மைத் தலைவராக விளங்கிய சர். பி. டி. தியாகராயர் காலமானார். 1927ம் ஆண்டில் "திராவிடனை" நடத்தும் பொறுப்பை, ஜஸ்டிஸ் கட்சி, பெரியார் அவர்களிடம் முதன் முறையாகக் கொடுத்தது. 1929ல் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளோடு, சிவப்புக் கொடியும், அதன் விளக்கமும் தமிழ் நாட்டிலுள்ள மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டன. 1938ல்தான் முதன் முதலாக ஒரு போராட்டத்தை நடத்தும் ஆற்றல் இயக்கத்துக்கு வந்தது, இந்தப் போராட்டத்திற்கு முதலில்வித்திட்டவர், கரூர் ஈழத்தடிகளாவார்.

1930ல் திருச்சியில் கூடிய தமிழர் மாபெரும் மாநாட்டில்,. தோழர்கள் தமிழவேள் த. வே. உமாமகேஸ்வரன், நாவலர் ச. சோமசுந்தரபாரதி போன்றோர் பலரும் பங்கெடுத்துக் கொள்ள அழகர்சாமி மிகவும் பாடுபட்டார். இவர்களையெல்லாம் சுயமரியாதைக்காரர்களுக்குப் பிடிப்பதில்லை. ஆயினும் மொழிப் போராட்டத்தின் பேரால், படித்த பண்டிதர்களையும் அவர்களைக் கண்டால் பிடிக்காமலிருக்கிற சுயமரியாதைக்காரர்களையும் ஒன்று சேர்க்கும் ஓர் ஒப்பற்ற சந்தர்ப்பத்தை உண்டாக்கினார்.

தமிழர் மாநாடு மிகச் சிறப்பாக நடந்தேறியது. ஆனால் அழகர்சாமி நினைத்தபடி நடக்காது இருந்தது அவருக்கு ஒரு பெருங் குறையாகப்பட்டது எனவே காஞ்சீபுரத்தில் இந்தி எதிர்ப்பு மாநாட்டைக் கூட்டுவதற்கான ஏற்பாட்டைச் செய்யும்படி தூண்டினார். செயல்கள் மிக விரைந்துசெய்யப்பட்டன. மாநாடும் இனிது நிறைவேறியது. இந்த இந்தி எதிர்ப்பு மாநாடே அழகர்சாமி எதிர்பார்த்ததைச் செய்து முடித்தது. இக்காலத்தில்தான், இதற்கு முன்பு இருந்த ஜஸ்டிஸ் கட்சியின் போக்கு அடியோடு மாறும்படியான நிலைமை ஏற்பட்டது.

'இந்தி எதிர்ப்புப் போர்' என்று அறப்போராட்டத்தைத் துவக்கும் போது, ஜஸ்டிஸ் கட்சியின் முக்கிய தலைவர்கள் என்போர்க்கே போராட்டம் எங்கே போய் முடியும் என்பது தெரியாதிருந்தது. தமிழ்நாட்டில் இந்தி நுழைவதை எதிர்த்து நடத்தப்பட்ட இந்தி எதிர்ப்புக் கூட்டங்களுக்குப் பெருந்திரளான மக்கள் வர ஆரம்பித்தனர். மக்களின் ஆதரவு இந்தி எதிர்ப்புக்கொள்கைக்குப் பெருவாரியாக ஏற்பட்டது. போராட்டத்தில் இறங்கிச் சிறைபடவும், தண்டனை ஏற்கவும் உறுதி கொண்ட இளைஞர்கள் பலர் முன்வந்தார்கள். களத்தில் தொண்டர்கள் தயாராக நின்றார்கள். எதிர்த்தரப்பில் வந்து நிற்க சர்க்காரும் தயாராயிற்று. தொண்டர்கள் போராட்டத்தை முற்றவிடவேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்தார்கள். மறியல் துவக்கம் பற்றி முதலில் பெரியாருக்கு அவ்வளவாகப் பிடித்தமில்லாமலிருந்தது. இத்தகைய நிலைமை சிலநாட்கள் சென்னையில் இருந்தது. என்ற போதிலும் மொழிப்பற்றுக்கொண்டதொண்டர்களின் ஆர்வம் நிலைமையை நீடிக்க விடாமல் போராட்டத்தை விரைவில் ஆரம்பிக்கும்படி செய்துவிட்டது. இந்தி எதிர்ப்பில் தீவிரமாக ஈடுபட்டவர்களைச் சர்க்கார் கைது செய்ய ஆரம்பித்தது.

இந்தி எதிர்ப்பு இயக்கத் தலைவர்கள் கைது செய்யப்பட்டுச் சிறையிடப்பட்டார்கள். தலைவர்கள் சிறை சென்றதும், மறியல் களத்தில் தொண்டர்கள் திரளத் தொடங்கினார்கள். எல்லா ஊர்களிலும் பொதுக்கூட்டங்களும், மாநாடுகளும் நடத்தப்பட்டன. இந்த நிலையில்தான் "தமிழர் பெரும் படை"யைத் திருச்சியில் திரட்டினார் நண்பர் அழகர்சாமி.

படை திரண்டது. படையைக் கண்காணிக்கும் அமைச்சராக மணவை ரெ. திருமலைசாமி நியமிக்கப்பட்டார்.. படை போகும் ஊர்களுக்கு முன்னதாகச் சென்று, படைக்குத் தங்கும் இடமும், சாப்பாட்டு வசதிகளும் செய்துதரவேண்டிய பொறுப்பு என்னிடம் விடப்பட்டது. படையை ஒழுங்குபட நடத்திச் செல்லும் பொறுப்பையும், ஆங்காங்கே பொதுக்கூட்டங்களில் பேசும் பொறுப்பையும் அழகர்சாமி ஏற்றுக்கொண்டார். இதில் மூவலூர் இராமாமிர்தத்தம்மையாரும், சித்தக்காடு ராமையாவும் எடுத்துக் கொண்ட பங்கு விட்டுவிடுவதற்குரியதல்ல. படை வருகைக்கு இடவசதி—சாப்பாட்டு வசதி ஆகியவைகளைச் செய்ய நான் எடுத்துக் கொண்ட வேலைகள் மிக எளிதாகவே முடிந்தன. எல்லா ஊர்களிலும் நான் செல்லுவதற்கு முன்பே அவ்வூர்த் தோழர்கள் மிக்கப் பரிந்து ஆதரவு காட்டினார்கள். திருச்சியிலிருந்து 100-பெயர்களை அழைத்துக் கொண்டு, சற்றேறக்குறைய 60-ஊர்களில் தங்கி, சுமார் 180-ஊர்களுக்கு மேலாகப் பிரசாரம் செய்து கொண்டு, 250-மைல் தொலைவு படையை நடத்தி, சென்னைக்குக் கொண்டுவந்து சேர்த்த பெருமை அனைத்தும் அழகர்சாமிக்கே உரியதாகும். (அடுத்த பக்கம் பார்க்க

# வழக்கு நிதி நன்கொடை

"திராவிட நாடு" பத்திரிகைக்கு ஜாமீன் கட்டும்படி சர்க்கார் கேட்டது பத்திரிகைச் சுதந்தரத்தைப் பறிப்பதாகும் என்று கருதிப், பல தோழர்கள், வழக்காடுவதற்கு வேண்டிய பொருளுதவியும் செய்து வருகிறார்கள். நன்கொடை உதவியவர்களின் விபரம் கீழே குறிக்கப் படுகிறது:—

சென்னை

| | |
|---|---|
| தோழமைக் கழகம் | 5 4 0 |
| ஏ. ஆர். சேஷாசலம் | 2 0 0 |
| எஸ். கஜபதி | 1 0 0 |
| கே. கண்ணன் | 1 0 0 |
| எம். நம்பியப்பன் | 1 0 0 |
| வி. கே. செல்வராசன் | 1 0 0 |
| தனபாலன் | 1 0 0 |
| சர்வகோபால் | 1 0 0 |
| பலராமன் | 1 0 0 |
| தட்சணாமூர்த்தி | 1 0 0 |
| எம். ஆர். கன்னியப்பன் | 1 0 0 |
| துளசிங்கம் | 1 0 0 |
| ரஹிம்ராதாசகோதரர்கள் | 1 0 0 |
| வி. மோகனரங்கன் | 0 8 0 |
| கோதண்டன் | 0 8 0 |
| டி. இராசகோபால் | 0 8 0 |
| எம். சுந்தரம் | 0 8 0 |
| கே. மாதவன் | 0 8 0 |
| கனகராஜ் | 0 8 0 |
| கே. வி. எஸ். மணி | 0 8 0 |
| டில்லிபாதர் | 0 8 0 |
| எம். எஸ். சிவராஜ் | 0 8 0 |
| ஆர். முத்துகிருஷ்ணன் | 0 8 0 |
| கே. தாமோதரன் | 0 8 0 |
| பி. எஸ். பழனி | 0 4 0 |
| முஸ்தபா | 0 4 0 |
| குஞ்சிநாயர் | 0 4 0 |
| டி. புண்ணியம் | 0 4 0 |
| ஆர். இராமகிருஷ்ணன் | 0 4 0 |
| ச. பாலசுந்தரம் | 5 0 0 |
| டி. சுப்பிரமணியம் | 1 0 0 |
| ராம்தாஸ்வர்மா | 1 0 0 |
| சி. எஸ். இராமசாமி | 0 8 0 |

பொள்ளாச்சி

| | |
|---|---|
| என். எ. ரசீட் | 1 0 0 |

இராமநாட்

| | |
|---|---|
| எஸ். எம். முகமதுகாசிம் | 1 0 0 |

கொழும்பு வெளிசரை

| | |
|---|---|
| கே. சுப்பராயன் | 5 0 0 |
| டி. முனுசாமி | 5 0 0 |
| பி. எஸ். துரைசாமி | 5 0 0 |
| என். மொட்டை | 5 0 0 |
| கு. க. பிச்சையா | 5 0 0 |
| பி. அளகிரிநாதன் | 5 0 0 |
| வி. சவுரிமுத்து | 5 0 0 |
| எஸ். எ. ரகீம் | 2 0 0 |
| கே. ரங்கசாமி | 2 0 0 |
| எம். முனுசாமி | 2 0 0 |
| வி. வேலாயுதம் | 2 0 0 |
| ஆர். பாண்டுரங்கன் | 2 0 0 |
| எ. கோபால் | 2 0 0 |
| சின்னகருப்பண்ணன் | 1 0 0 |
| என். கண்ணன் | 1 0 0 |
| கருப்பணன் | 1 0 0 |

கிழக்கரை

| | |
|---|---|
| எ. எம். அப்துல் காசிம் | 1 0 0 |

முத்துகவுண்டன் புதூர்

| | |
|---|---|
| வீ. இராமசாமி | 5 0 0 |
| கே. வெங்கோடன் | 5 0 0 |
| ஆர். பாலகிருஷ்ணன் | 1 0 0 |
| நாராயணசாமி | 1 0 0 |
| வி. கே. சண்முகம் | 1 0 0 |
| எம். எம். அருணசலம் | 1 0 0 |
| சின்னியன் | 0 4 0 |
| நஞ்சப்பன் ,, | 0 2 0 |
| சுப்பண்ணன் | 0 2 0 |

எஸ். எஸ். சென்னிமலை—

| | |
|---|---|
| செங்கோடன் | 0 2 0 |
| பாலசுப்பிரமணியம் கோவை | 0 4 0 |
| சின்னசாமி ,, | 0 4 0 |
| ராஜகோபால் ,, | 0 4 0 |
| கிரிராஜ் ,, | 0 4 0 |
| மாணிக்கம் ,, | 0 4 0 |
| தங்கவேலு ,, | 0 4 0 |
| அரங்கசாமி ,, | 0 8 0 |
| கண்ணுசாமி ,, | 0 8 0 |
| சுந்தரம் ,, | 0 4 0 |
| நந்தகோபால் ,, | 0 4 0 |

ஆலமரத்துப்பட்டி

| | |
|---|---|
| எஸ். எம். கதிரேசன் | 0 8 0 |
| சி. எ. நடேசன் மைசூர் | 1 0 0 |
| ரத்தினஸ்டோர்ஸ் சென்னை | 5 0 0 |
| ஆறுமுகம் பொன்மலை | 5 0 0 |
| ஜே. சீனிவாசன் ,, | 3 0 0 |
| ஏ. சின்னையன் ,, | 3 0 0 |
| சி. ராமய்யன் ,, | 1 0 0 |
| எட. நம்பிக்கைராஜ் ,, | 1 0 0 |
| திருமங்கலம் தனுஷ்கோடி | 1 0 0 |
| எஸ்-வீராசாமிசத்திரப்பட்டி | 0 4 0 |
| பி. பரமசிவம் ,, | 0 8 0 |
| வி. நடராசன் நாங்குனேரி | 1 0 0 |
| வி. பி. பசுபதி சென்னை | 2 0 0 |
| அரங்கசாமி பொன்மலை | 1 0 0 |
| இராதாகிருட்டிணன் ,, | 2 0 0 |
| எஸ். ஏ. துரைராஜ் ,, | 1 0 0 |
| ஏ. என். துரைராஜ் ,, | 1 0 0 |
| நவநீதகிருட்டினன் ,, | 1 0 0 |
| ஓர் அனுதாபி ,, | 1 0 0 |
| பி. பெருமாள் ,, | 1 0 0 |
| தேவராஜ் ,, | 0 8 0 |

பாண்டிச்சேரி

| | |
|---|---|
| எஸ். வி. ஓ. சி. பெட்ரோல்பங் | 3 0 0 |

தாத்தையங்கார்பேட்டை

| | |
|---|---|
| எம். எஸ். என். இராசன் | 1 0 0 |

இரளம் பாறைகிராமம்

| | |
|---|---|
| எஸ். எ. மார்கண்டன் | 1 8 0 |

விருதுநகர்

| | |
|---|---|
| எம். வ்பெரோசி | 2 0 0 |

தஞ்சாவூர்

| | |
|---|---|
| என். மீனாட்சிசுந்தரம் | 2 0 0 |

புதுக்கோட்டை

| | |
|---|---|
| அரு. பழ. சுப்பையா | 5 0 0 |
| | 150—6—0 |
| முன் கையிருப்பு | 2523—2—8 |
| ஆக மொத்தம் | 2673—8—8 |

(முன் பக்கத் தொடர்ச்சி)

படை நடந்து சென்ற அந்த இரண்டு மாத காலப் பிரசாரத்தால் போராட்டம் எவ்வளவோ வளர்ந்தது; இதற்குப் பின்பு சகல தலைவர்களும் கூட்டங் கூட்டமாகச் சிறை பிடிக்கப்பட்டார்கள்.

சர்க்காருடன் எதிர்த்து, ஒரு போராட்டத்தை நம் கட்சி நடத்திப் பார்த்துவிடவேண்டுமென்ற அழகர்சாமியின் நீண்டநாள் ஆசை இந்த இந்திஎதிர்ப்புப் போராட்டத்தின்போது நிறைவேறியது,

அடுத்த பத்து ஆண்டுகளுக்குப் பின் அதேமாதிரியான போராட்டத்தில், அழகர்சாமி சிறை சென்றார்.

✲

# ★ இரு துருவங்கள் ★

[ ஒளியழகன்—குடந்தைக் கல்லூரி ]

சிந்தனைபுரி நோக்கிப் புறப்படுவோம்! அதோ கலீலியோ! அவனைச் சுற்றிக் கற்கள் வீசப்படுகின்றன. ஏன்? உலகம் தட்டையல்ல, உருண்டை என்று கூறிய "பாவத்திற்காக"! உலகம் உருண்டை என்று கூறியதற்கு அவனுக்குத் தரப்பட்ட பரிசு உருண்டைக் கற்கள். நம்முடைய கவிகள் ஆரணங்குகளின் காதுகளில் ஊசலாடும் "தொங்கட்டான்களை"ப் பற்றி அகவற்பா பாடிய நேரத்திலே தான்—நம்முடைய ஞானக் கண்ணினர் உடலைப் பிரிந்த உயிர் ஊசலாடுவதை ஆராய்ச்சி செய்துகொண்டு தவம் இருக்கும் நேரத்திலேதான்—இத்தாலி நாட்டிலே கலீலியோ எனும் விஞ்ஞானக் கண்ணினன் ஊசலாடும் விளக்கிலிருந்து காலத்தைக் காட்டிடும் கடிகாரத்தின் அடிப்படையான உண்மையைக் கண்டுபிடித்தான்—இவைகள் அவனுடைய மனத்திரையிலே விழாமல் இருக்க முடியுமா? அவன்தான் சிந்திக்கத் தொடங்கியவனாயிற்றே!

அடுத்து, அதோ நிபுணன் நியூட்டன்! அவன் ஒரு சிறு பையன். ஆப்பிள் மரத்தடியின் கீழே சுழலும் சிந்தனையுடன் அமர்ந்திருக்கின்றான். ஓர் பழம் அம்மரத்திலிருந்து அவனருகிலே விழுந்தது. அவனுடைய சிந்தனையும் கலைந்தது. கண்டான் பெரும் உண்மையை! அந்தப்பழம் நிலப்பரப்பை நோக்கி வருவானேன், ஏன் ஆகாயத்தை நோக்கிச் செல்லக் கூடாது என்று எண்ணினான். எண்ணத்தின் விளைவினால் நிலத்தின் கவர்ச்சியைக் (Gravitationa lattraction) கண்டுபிடித்தான். இந்தக் காட்சி ஆங்கில நாட்டிலே!

ஓர் வழிப்போக்கன் ஆலமரத்தடியிலே தூங்குகின்றான். தன் மேல் ஓர் ஆலம் பழம் விழுந்ததினால் விழித்து எழுகின்றான். அந்தப் பழத்தைப் பற்றி அந்த பாமரன் என்ன எண்ணுகிறான்? ஆகா, என்னே கடவுளின் செயல்! இந்தச் சிறிய பழத்தைப் பெரிய பழமாகக் கடவுள் படைத்திருந்தால் என்கதி என்னவாகும் இந்த ஆலமரத்தடியில்தானே கடவுள் ஐந்து முனிவர்களுக்கு உபதேசம் செய்தார் என்று கடவுள் சிந்து பாடுகிற அளவோடு தனது எண்ணத்தை நிறுத்திக்கொள்கிறான். எண்ணின இரு வேறு கருத்துகளும் இருதுருவங்கள். முன்னது அறிவின் விளைவு. பின்னது மூடநம்பிக்கையில்விளைந்த விளைவு. இந்த இரண்டில் எதுசரி, எதுதவறு, என்ற ஆராய்ச்சிக்கே இடமில்லாமல் இரண்டையும் ஏற்றுக்கொள்ளத்தான் செய்கின்றனர்.

அடுத்த காட்சி, காலை நேரம். ஓர் இளைஞன் ஆற்றின் தெள்ளிய நீரை எடுத்துத் தனது வாயைக்கழுவுகின்றான். கொப்பளிக்கும் நீரைத் திவலைகளாகக் காணுவதில் அவனுக்கு ஆனந்தம் போலும்! ஆகவே அந்தத் திவலைகள் கதிரவனின் கதிர்களிலே பலவித வண்ணங்களை வாரி இறைக்கும் விநோதப் பண்பைக்கண்டு களிப்படைகின்றான். அதே நேரத்திலே அங்குள்ள "அருளானந்தர்" ஒருவர் தன் காலைநேர வழிபாட்டைச் செய்ய நீர்த்திவலைகளை தன் கைவிரல்களால் மேலே போகும்படி தெளிக்கத்தான் செய்கிறார். இருவரும் திவலைகளைக் காணுகின்றனர். ஆனால் கருத்து வெவ்வேறு. வெவ்வேறு மட்டுமல்ல. ஒன்றுக்கு ஒன்று முரண்பாடு. முன்னது நியூட்டன் பரம்பரையின் செய்கை. பின்னது வியாசர் பரம்பரையின் செய்கை. முன்னது விஞ்ஞானத்தில் விளைந்த விநோதம்! பின்னது "ஞானக்கண்ணினரின்" ஞானோபதேசத்தின் விளைவு!!

அடுத்த காட்சியிலே ஓர் "மைக்ரஸ்கோப்" நுண்நோக்கு ஆடி; அதனடியிலே ஓர் மலர். அந்த மலரின் நுண்ணிய பாகங்களை ஓர் விஞ்ஞான மாணவன் ஆராய்கிறான். உண்மை பல அறிகிறான். மலரினத்திற்கு மேலும் வளப்பம்தர முயலுகிறான். அதே இனத்தின் மலரைக்காணும் ஓர் பூசாரன், எந்தப் "பகவானுக்கு" அதை அளிப்பது என்பது பற்றி ஆராயத் தொடங்குகிறான்.

அடுத்த காட்சியிலே புகை மண்டலம்தோன்றுகிறது. ஆராய்ச்சிச்சாலையிலே விஞ்ஞானப்பகுதி மாணவன் எழுப்பும் நீராவிப்புகையை நீராக மீண்டும் ஆக்குகிறான்,இல்லையெனில் இருவேறு வாயுக்களாகப் பிரித்தெடுத்து காற்றோடு கலக்கச் செய்கிறான். ஆம்! அதோ யாககுண்டத்திலே புகைமண்டலத்தை எழுப்புகிறார்கள் வியாசர் பரம்பரையினர். அதனால் மழையுண்டா? ஏமாந்த ஏமாளிகளானோர்ஏராளமானவர்கள். ஆம்! பச்சைப்புல்லின் விஞ்ஞானப் பெயர் என்று நுண்நோக்கு ஆடியின் மூலமாக:ஆராய்ச்சிசெய்யும் கூட்டம் ஒருபக்கத்தில்! மற்றொரு பக்கத்திலே 'இன்னும் காஞ்சபுல்லில் "மகத்துவம்" இருக்கத்தான் செய்கிறது', என்றுகூச்சலிடும் கூட்டம்!

அடுத்த காட்சியிலே "டெலிபோன்" கினிங்.........கினிங்........ என்று கேட்கிறது. 'ஹலோ,யாரது'

"நான்தான் ஸ்வாமி வீராசாமிப் பிள்ளை"

"பிள்ளைவாளா! இருங்கோ வந்துட்டேன்"

"என்ன ஸ்வாமி நேரமாயிட்டுது. திதி கொடுக்கிற காலமும் தவறிப் போயிடுத்து......"

"பிள்ளைவாள்கோவிச்சுக்காதேள்! மழை 'சோ'ன்னு பெய்யறது. வீட்டிலியோ கொடையைக் காணோம். பிள்ளைவாள்! மறந்துட்டேன். வர்ரத்துக்குப் பஸ்கூட கிடையாது. ஏதோ, ஸ்டைர்க்காம்"

"பின்னே என்ன பண்றது ஸ்வாமி"

"ஒரு யோசனை தோணித்து. பேசாம நான் மந்திரத்தை இந்த "டெலிபோனில்" சொல்லிபிடரேன். திதிக்கு வேண்டிய சாமானெல்லாம் இருக்கோலியோ?"

"இருக்கு ஸ்வாமிகள் இருக்கு!"

"அப்படின்னா மந்திரத்தைச் சொல்லி திதியை முடிச்சுபிடறேன். சாமானையெல்லாம் ஒரு கைவண்டியில் அனுப்பிச்சிடுங்கோ. நான்என் பிள்ளையாண்டானை வரச்சொல்றேன் பிறகு."

"அப்பிடின்னா, சொல்லுங்கோ மந்திரத்தை"

"சுக்லாம் பரதாரம் விஷ்ணும்..."

* * *

இந்தக்காட்சி நம்நாட்டிலே நடக்கக்கூடியது. நடந்துகொண்டும்இருக்கிறது. 'கல்கி'யில்கூட இந்த காட்சி சித்தரித்து காட்டப்பட்டிருந்தது சிலதிங்களுக்கு முன்னர்.

மேலே கண்ட பரிதாபகரமான—ஏன்-வெட்கப்பட வேண்டிய காட்சியைக் காணும் இளைஞன் இன்னொரு காட்சியை தன் மனத்திரைக்குக் கொண்டு வரலாம்.

"ஹலோ! யாரது"

"நான்தான் சார், ஒளியழகன்".

"ஓ! நீயா, என்ன காரணம்?"

"உடல் நலம் சரியாக இல்லை"

"இங்கு வரத்தானே இயலாது"

"ஆமாம்"

"அப்படியானால் இன்றைய பாடத்தை 'டெலிபோனிலேயே' கூறிவிடுகிறேன்"

* * *

அடுத்து "ஸ்டெதஸ் கோப்"—நாடி பார்க்கும் கருவி நம் மனக்கண் முன் நிற்கிறது. "டப்...டப்" என்று அடிக்கும் இதயத் துடிப்புகள் அதன் மூலம் மருத்துவ நிபுணரால் அறியப்படுகிறது. ஒருவன் நோய் வாயில் கிடக்கிறான். அந்த நோயாளி பழனி மலையில் இருக்கும் பழனியாண்டியை வேண்டின போதிலும் பக்கத்துத் தெருவிலிருக்கும் பழனியாண்டி எனும் மருத்துவ நிபுணரை நாடத்தான் செய்கிறான். பழனிப் பஞ்சாமிர்தத்தில் நம்பிக்கை வைப்பவன் "பென்சிலின்" மருந்தில் நம்பிக்கை வைக்கத்தான் செய்கிறான். பூசாரியின் உடுக்கையிலே நம்பிக்கை வைப்பவன் மருத்துவரின் "ஸ்டெதஸ் கோப்"பிலே நம்பிக்கை வைக்காமல் இல்லை.

ஸ்டெதஸ் கோப் — உடுக்கை

மருத்துவர் — பூசாரி

"பென்சிலின்" — பஞ்சாமிர்தம், இவைகள் ஒன்றுக்கு ஒன்று இரு துருவங்கள்—என்றும் சந்திக்க முடியாத இரு துருவங்கள். பாமரனின் உள்ளம் உடுக்கை, பூசாரி, பஞ்சாமிர்தம்—இவைகளில் நம்பிக்கை வைத்தாலும்கூட காலத்தின் வேகம் "ஸ்டெதஸ் கோப்"—பென்சிலின்-மருத்துவர் — இவைகளில் ஓரளவு நம்பிக்கை வைக்கத்தான் செய்கிறது.

அடுத்த காட்சியிலே தன்னொளியைப் பரப்பிடும் வெண்மதி தன் முழு உருவத்துடன்! அது ஓர் கோள்! கிரகணம் கோள்களின் அசைவினால் ஏற்படுகிறது. இது விஞ்ஞானம் கூறும் உண்மை, சந்திரனைப் பாம்பு கௌவிக்கொள்வது, அதுதான் கிரகணம். ஆகவே அந்தப் பாம்பு சந்திரனை விடும்வரை மந்திரத்தைச் சொல்லிக்கொண்டு ஆற்றங்கரையோரத்திலே நின்று கொண்டிருக்கவேண்டும். கோளங்களின் கோலூறுகளினால் வெண்மதி மறைக்கப் படுவதைப் பார்ப்பதற்காக ஒரு விஞ்ஞானி தன்னுடைய கையில் "தொலைநோக்கு ஆடியை" வைத்திருக்கிறான். அதே நேரத்திலே ஓர் "மெய்ஞ்ஞானி" தன்னுடைய விரல்களை மூக்கிலே வைத்திருக்கின்றான். இந்தவேறுபாடான காட்சியையல்ல—முரண்பாடான காட்சிகள் இரண்டும் இந்த நாட்டில் படித்தவர்களிடத்திலேயே அமைந்திருக்கின்றன.

சக்கரம், ரயில், கப்பல், விமானம், ரேடியோ, டெலிவிஷன், சந்திரமண்டலபயணம்— இவைகள் தான் அவர்கள் வளர்ச்சியடைந்துள்ள பட்டியல், ஆழி கொண்ட பெருமானைக் காணல், வியாழனன்று குருடனை தரிசித்தல், மாலையிலே

(5-ம் பக்கம் பார்க்க)

## காணமுடியாத சர்வாதிகாரம்!

திராவிடர் கழககொள்கைகளுக்கு மாறாக தனக்குத்தான் செய்வது தகாதது என மனப்பூர்வமாகத் தெரிந்திருந்தும், பலர் வேண்டுகோளுக்கு எதிராகவும், 10—7—49 மத்திய திராவிட கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் நடப்பது நன்றாகத் தெரிந்திருந்தும் பல அரிய தியாகங்கள் செய்த தொண்டர்கள் மனம் பதற திரு. ஈ. வெ. ராமசாமி அவர்கள் தான் வகிக்கும் திராவிடர் சமுதாய நிரந்தர தலைவர் பொறுப்பையும் மீறி, உலகத்திலேயே காணமுடியாத சர்வாதிகாரத்தைக் கொண்டு திராவிட நாட்டுப் பெண்களுக்கு இழிவேற்படும் வகையில் மணஞ்செய்துகொண்டதை யொட்டி பெரியாரின் தலைமையின் கீழ் தொண்டாற்ற விருப்பமில்லை யென்பதோடு, உடனே மத்திய நிர்வாகக் கமிட்டியைக் கூட்டி ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அம்பில்—அ. பெ. தர்மலிங்கம்

தி. க. மத்திய நிர்வாகக்கமிட்டி உறுப்பினர்.

## திருத்தம்

கடந்த (7—8—49) வார இதழில் 13-ம் 14-ம் பக்கங்களில் "கண்ணீர்த் துளிகள்" தலைப் பின்கீழ் சில ஊர்களும், கழகத் தோழர்கள் பெயர்களும் தவறுதலாக மீண்டும் அடுத்த பக்கத்தில் 'மறுமுறையும்' வந்துவிட்டது. அச்சுக் கோக்கும் தோழரின் தவறு காரணமாக ஏற்பட்ட பிழையைத் திருத்திப்படித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

( ஆ. ர். )

## செங்கல்பட்டு டிஸ்டிரிக்டு கோர்ட்டு

A. S. 36/49.

வெங்கடாசல நாயகர்--அப்பீல்வாதி

மஹம்மதலிசாயபு — வகையறா

அப்பீல் பிரதிவாதிகள்

## நோட்டீஸ்

ஷை அப்பீல் 2-ம் அப்பீல் பிரதிவாதி கன்னிஸாக்கு,

அப்பீல்வாதி செங்கல்பட்டு சப் கோர்ட்டு os 69/47 ஜட்ஜ் மெண்டுக்குமேல் ஷை அப்பீல் தாக்கல் செய்து ஷை அப்பீல் வாய்தா 19—8—49-ல் போடப்பட்டிருக்கிறது. அன்று நீங்கள் கோர்ட்டில் ஆஜராகத்தவறினால், எக்ஸ்பார்ட்டி செய்யப்படுவீர்.

ஜி. கிருஷ்ணமாச்சாரியார்,

அப்பீல்வாதி-வக்கீல்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi Street, Kancheepuram.